JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர்: 13 | இதழ்: 8 | அக்டோபர் 2022 | ஆண்டு சந்தா ₹100/

100%

# சோர்வு

இயேசு நம் சிந்தையில் நிறையும்பொழுது
எந்த சோர்வையும் வெல்லலாம்



வாலிபர் உலகம்

# INDEX


04 நிலைத்திரு!

12 சுத்த இருதயத்தோடு கர்த்தரைத் தேடுங்கள்!

20 Red Alert


**இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!**

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்

**வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!**

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" **என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை 9750955547 என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.**

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |


**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**

நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.

Phone: 04639-353333

Cell:9750955547

youth@jesusredeems.org

www.jesusredeems.com

www.youthworld.in



**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரேச்சல் செல்வகுமார்

**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா




# தலைவாசல்

**அன்பான இளம் நெஞ்சங்களுக்கு! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!**

இன்றைய வாலிபர்கள் சாதிக்க பிறந்தவர்கள், சாதனையாளர்கள், களத்தில் இறங்கி காரியத்தை முடிப்பவர்கள் என்று சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் மறுபக்கம் தோல்வி, குறைவு, பிரச்சனை என்று ஒரு சிறிய காரியமானாலும் சோர்ந்து போய் மனந்தளர்ந்து என்னால் முடியாது, நான் எதற்கும் உபயோகம் இல்லை என்று தங்களை சுருக்கிக் கொண்டு முடங்கி மூலையில் போய் உட்காருகிறார்கள். இன்றைக்கும் சோர்வின் உச்சம், தற்கொலை தான் முடிவு என்று சொல்லி பல மாணவர்கள் சாத்தானுடைய மாய வலையில் சிக்கியிருக்கிறார்கள்.



மொழி தெரியாத தேசம், வித்தியாசமான கால சூழ்நிலை, போதுமான பண வசதி இல்லை, பராமரிக்கவோ, உதவி செய்யவோ ஒருவரும் இல்லாத இந்த சூழலில் மனைவி பிள்ளைகளோடு, இந்தியர்களும் இயேசுவை அறிந்து, பரலோகம் செல்ல வேண்டும் என்ற பெரிய தாகத்தோடு சுவிசேஷ பணிக்காக இங்கிலாந்திலிருந்து இந்தியா வந்தார். ஆத்துமாக்களுக்கு இயேசுவை அறிவிக்கும் வேளைகளில், அவர் சந்தித்த இன்னல்கள், சோர்வுகள், வேதனைகள் மற்றும் பல கலக்கமான சூழ்நிலைகளுக்கு அளவேயில்லை.



இந்தியாவிற்கு வந்த முதல் வருடத்திற்குள் ஒருவர் பின் ஒருவர் நோய்வாய்ப்பட்டனர். சுகவீனத்தால் இறந்த மகனை, தன் சொந்த கைகளால் அடக்கம் செய்தார். அதின் பாதிப்பினால் மனநிலை பாதிக்கப்பட்ட மனைவியும் நாளடைவில் மரித்தும் போனார்கள். ஒரு சாயத் தொழிற்சாலையில் வேலை பார்த்துக் கொண்டே வேத வசனங்களை அச்சடிப்பதற்கு ஒரு அச்சுக்கூடமும் ஆரம்பித்தார். கொஞ்ச நாட்களிலேயே அவரது அச்சுக் கூடமும் தீக்கிரையானது. அவர் தனது வேலையையும் இழந்தார். ஆனாலும் கேரி மனம் சோர்ந்து போகமலும். சொந்த தேசத்திற்கு திரும்பி செல்லாமலும் 41 ஆண்டுகள் சுவிசேஷ பணியை சிறப்பாக செய்து, மேலும் இந்தியாவின் முக்கிய மொழிகளான, Bengali, Oriya, Marathi, Hindi, Assame & Sanskrit ஆகிய மொழிகளில் வேதாகமத்தை மொழிபெயர்த்துள்ளார். அதுமட்டுமல்லாமல் வேதத்தில் சில பகுதிகளை 29 மொழிகளிலும் மற்றும் எழுத்து வடிவம் இல்லாத மொழிகளில் (Dialects) மொழி பெயர்த்தார். இதுமாத்திரமல்லாமல் பெங்காலி மொழியில் Dictionary உருவாக்கியுள்ளார். மேலும் சமுதாய சீர்திருத்தவாதியாய் இருந்து சதி என்கிற உடன்கட்டை ஏறுதல் மற்றும் சமுதாய கொடுமைகளை அகற்ற பெரும்பாடுபட்டார். செராம்பூர் என்ற பெரிய பல்கலைகழகத்தை நிறுவினார். அவர் தமிழ் மொழிக்கு ஆற்றிய சேவைக்கு அளவே இல்லை என்று சொன்னால் மிகையாகாது.

தன்னுடைய வாழ்க்கையில் எத்தனையோ இன்னல்கள், சோர்வுகள் வந்த போதிலும், அவற்றை தடைகற்களாய் நோக்காமல், படி கற்களாய் பயன்படுத்தி, சாதித்து சுவிசேஷ பணியை செய்தவர் வில்லியம் கேரி. ஆனால் நாம் ஒன்றுமில்லாத காரியங்களுக்கு சோர்ந்து போய் முடங்கி போகிறோம். நாம் நம்முடைய சோர்வை விட்டு எழும்ப தேவன் விரும்புகிறார். நாம் அவருக்காக எழும்பினால் பல சாதனைகளையும், பல படைப்புகளையும் உண்டாக்கலாம்.

**வாலிபனே! உன் வாழ்நாளில் நீ இயேசுவுக்காய்**
**என்ன செய்தாய் என்பதை யோசி, செய்ய முற்படு! செயல்படு!**
**தேவன் உன்னை வல்லமையாய் பயன்படுத்துவார்! சோராமல் ஓடு**

**கிறிஸ்துவின் பணியில்,**
**அவினாஷ்**

சாட்சி: ஜிஷ்யா

# நிலைத்திரு!

**கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து சிறுவயதிலேயே மிஷனெரியாக வேண்டுமென்ற வாஞ்சையுடன் வளர்ந்து, வாலிப வயதில் தனது அர்ப்பணிப்பை மறந்து, உலக சிற்றின்பங்கள் தான் வாழ்க்கை என்று வாழ்ந்த அவரை, இயேசு சந்தித்து, சிறுவயது அர்ப்பணிப்பை திரும்ப மெருகேற்றி, இன்றைக்கு மிஷனெரி பயிற்சி பெற்று வரும் சகோதரர் ஜெனில் மேத்யூவுடன் ஓர் நேர்காணல்.**

**உங்களுடைய சிறுபிராயம் மற்றும் குடும்பத்தைப் பற்றி சொல்லுங்களேன்?**

நாங்கள் C.S.I. குடும்பத்தைச் சார்ந்தவர்கள். தூத்துக்குடி மாவட்டம் செய்துங்கநல்லூரில் வசித்து வருகிறோம். சிறுவயது முதல் அங்கு தான் வளர்ந்தேன். அப்பா, திரு. ஃபென் மேத்யூ, செய்துங்கநல்லூரில் உள்ள St. Xavier's Polytechnic கல்லூரியில் பேராசிரியராக இருக்கிறார். அம்மா, திருமதி எர்லின் மேத்யூ, ரோஸ்மேரி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறார்கள். எனக்கு ஃபெனில் ஐசக் எபினேசர் என்ற அண்ணன் உள்ளார். அவர் Horeb exports கம்பெனியில் Expor managerஆக இருக் கிறார். நான் சிறுவயதில் கார்ட்டூன் அதிகமாக பார்ப்பேன். Spiderman ஆகி, உலகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற கொள்கையை உடைய வனாக தாவுவது, குதிப்பது, மரம் ஏறுவது போன்ற பல காரியங்களில் ஈடுபட்டு வந்தேன். அந்த சூழ்நிலையில் தான் என் தாத்தா திரு.ஃபென் ஆபிரஹாம், Spidermanஐ விட இந்த உலகத்தையும், உன்னையும், என்னையும் காப்பாற்றின சூப்பர் ஹீரோ இயேசு என்று எனக்கு கற்றுக் கொடுத்தார். தாத்தா சொன்ன அந்த சூப்பர் ஹீரோவான இயேசுவைப் போல வாழ வேண்டு மென்று தீர்மானித்தேன்.





சகோ. ஜெனில் மேத்யூ

**சரி... சிறுவயதிலேயே கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த நீங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டீர்கள்... சிறுவயதில் உங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கை மற்றும் பள்ளிப் படிப்பைப் பற்றி சொல்லுங்களேன்?**

ஆரம்ப பள்ளி படிக்கும் போதே நான் சண்டை போடுவேன், படிப்பில் ஆர்வம் கிடையாது. எப்போதும் கார்ட்டூன், Spiderman என்று தான் இருப்பேன். எனது தாத்தா என் சிறுவயதிலேயே இயேசுவைப் பற்றி தெளிவாக சொல்லிக் கொடுப்பார். நான் 3ம் வகுப்பு படிக்கும் போது, வகுப்பில் என்னை அறிமுகப்படுத்தும் போது, என் பெயர் ஜெனில் மேத்யூ, நான் மிஷனெரி என்று என்னை அறிமுகப்படுத்தினேன். இதற்கு காரணம், ஒரு ஞாயிற்றுக்கிழமை எங்கள் சபை குருவானவர், ''இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்'' என்ற பாடலின் வரலாற்றைக் கூறினார். நோக்செங் (Nokseng Garo tribe of Meghalaya, Assam) அவர்களின் விசுவாசம் என் இருதயத்தைத் தூண்டி எழுப்பியது. அப்பொழுது, நானும் அவரைப் போல் மிஷனெரியாக வேண்டுமென்று என் இருதயத்தில் தீர்மானித்தேன். அந்த பாடலை கற்றுத் தருமாறு என் தாத்தாவிடம் கேட்டு, என்னுடைய தீர்மானத்தையும் தாத்தாவிடம் கூறினேன். அவர் என்னை உற்சாகப்படுத்தி, "Nokseng's Last Word" என்ற பாடலைப் பாடிய சாது சுந்தர் சிங் அவர்களைப் பற்றியும் கூறினார். நான் வாழ்ந்தாலும் மரித்தாலும் இயேசுவுக்காக தான் என்ற அர்ப்பணிப்போடு அந்தப் பாடலைக் கற்றுக் கொண்டேன். அதன்பிறகு சாது சுந்தர் சிங் அவர்கள் கூறியக் கதைகளை என் தாத்தா எனக்கு சொல்லிக்

கொடுத்து வளர்த்தார்கள். இப்படிதான் என் சிறுவயது வாழ்க்கையாக இருந்தது.

**சூப்பர்... சிறுவயதிலேயே மிஷனெரி அர்ப்பணிப்பு... உங்களது இளம் வாலிப வயதில் அந்த அர்ப்பணிப்பைத் தொடர முடிந்ததா?**

என் தாத்தாவின் மரணத்திற்கு பிறகு, நான் கொஞ்சம் கொஞ்சமாக, என் நோக்கத்தை மறந்தவனாக மாறினேன். கால்பந்து விளையாடுவதில் மிகவும் ஆர்வம் வந்தது. இந்திய அணிக்கு விளையாட வேண்டும் என்ற எண்ணத்தில், Lionel Messi, Cristiano Ronaldo, R.Kaka போன்ற கால்பந்து வீரர்களின் விளையாட்டைப் பார்ப்பதில் அதிகமாக என் நேரத்தைக் கழித்தேன். நான் 10ம் வகுப்பிற்கு பிறகு Sports hostelலில் சேர அப்பாவிடம் சண்டை போட்டு சேர்ந்து, அதில் தேர்ந்தெடுக்கப்பட்டேன். தேர்வுக்கு முன்னால் என் காலில் பெலவீனம் வந்ததை, என் அப்பாவிடம் சொன்னால் போக வேண்டாம் என்று சொல்வார்கள் என்று அதை சொல்லாமல் மறைத்து, தேர்வில் கலந்து கொண்டேன். 20 சதவீதம் கூட என்னால் விளையாட முடியவில்லை. தேர்வு லிஸ்டில் என் பெயர் இல்லை. எனக்கு இயேசு மீது கொஞ்சம் வெறுப்பு வந்து விட்டது. ஆனால் இயேசுதான் எனக்கு எல்லாம் என்று சொல்வேன். 11, 12ம் வகுப்பு படிப்பதற்கு விருப்பமே இல்லாமல், பாளையங்கோட்டை ரோஸ்மேரி மெட்ரிக் பள்ளியில் படித்தேன். ஆனாலும் நான் படித்த வினா விடை மாத்திரமே பொதுத் தேர்வில் கேட்கப்பட்டது. இயேசு எனக்கு நல்ல மதிப்பெண்களைக் கொடுத்து வெற்றுபெற வைத்தார்.








**சூப்பர்... பள்ளிப் படிப்பை முடித்தீர்கள்... கல்லூரி வாழ்க்கை எப்படி இருந்தது?**

சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் B.Sc Visual Communication பிரிவு எடுத்துப் படித்தேன். கால்பந்தில் இருந்த என் விருப்பம் போட்டோகிராஃபிக்கு நேராக சென்றது. நான் பெரிய WildLife Photographerஆக வேண்டுமென்று என் நோக்கம் மாறியது. படித்துக் கொண்டிருக்கும் போதே, அங்கு வரும் மான், பறவைகள், இயற்கை போன்றவற்றை போட்டோ எடுக்க ஆரம்பித்தேன். அது ஒருவித மகிழ்ச்சியை தந்ததால், தினமும் அதிகாலையிலே DSLR கேமராவை எடுத்து கல்லூரியின் உள்ளேயே செல்வேன். போட்டோ மேல் ஒரு பைத்தியமாகவே அலைவேன். எனக்கு எல்லாமே இயேசு தான் என்று கூறுவேன், ஆனால் என் பரம அழைப்பை மறந்தவனாக இருந்தேன். நண்பர்களோடு ஊர் சுற்றுவது, மகிழ்ச்சியாக இருப்பது போன்றவற்றை செய்து வந்தேன். என் பெற்றோர் கூறியது போல் தினமும் ஒரு நீதிமொழியை வாசிப்பேன். அதனால் கெட்ட பழக்கங்களான சிகரெட், குடி, கஞ்சா போன்றவற்றிலிருந்து இயேசு என்னைக் காப்பாற்றினார். ஆனால் வேதத்தின் சத்தியத்தை அறியாதவனாகவே இருந்தேன். கண் தெரியாத ஓட்டக் காரனாகவும், திசை தெரியாத கப்பலைப் போலவும் தான் என் வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது.

**சரி... உங்களுடைய மிஷனெரி நோக்கத்தை மறந்து, போட்டோகிராபர் என்ற நிலைக்கு வந்தீர்கள்... கல்லூரியில் பரிசுத்தமாய் வாழ முடிந்ததா?**

கல்லூரி இரண்டாம் ஆண்டு, அரை ஆண்டு வரை நன்றாகப் போய்க் கொண்டிருந்தது. அதன்பிறகு எனக்கு வேறு வகுப்பில் படிக்கிற இரண்டு பெண்கள் அறிமுகமானார்கள். ஒரு பெண்ணை எனக்கு மிகவும் பிடிக்கும். அவளை காணும் போது Slow motion மற்றும் நான் சிறுவயதில் நான் பார்த்த Spidermanயில் வரும் ஹீரோயின் போல தோன்றும். இதை நான் என் அம்மாவிடம் சொன்னேன். என் அம்மா இது வேதத்திற்குப் புறம்பானது, ‘‘ஏற்ற காலத்தில் உனக்கு பிடித்தப் பெண்ணை நான் திருமணம் செய்து வைப்பேன்’’ என்று சொன்னார்கள். ஆனாலும் அவளைப் பற்றி தெரிந்து கொள்ள இன்னொரு பெண்ணிடம் பேச ஆரம்பித்தேன். இரவு முழுவதும் அவளோடு பேசுவது, chat பண்ணுவது என்று போனது. என்னை அறியாமலேயே நான் அவளை விரும்பி விட்டேன். ஒருநாள் பேசவில்லை என்றாலோ, message அனுப்பவில்லை என்றாலோ ஒருமாதிரியாக ஆகிவிடுவேன். இந்த சூழ்நிலையில் என் நண்பர்களும் காதலித்தார்கள். காதல் செய்வது தவறு இல்லை என்று என் மனதில் ஒரு விதையை விதைத்தார்கள். நாம்

விரும்பினால் திருமணம் செய்து கொள்ளலாம் என்று நண்பர்கள் கூறினார்கள். இவற்றை எல்லாம் தெரிந்து கொண்டு, ஒருநாள் இரவு நான் உன்னை விரும்புகிறேன் என்று அவளுக்கு Text message அனுப்பி விட்டேன். நாட்கள் பல கடந்து சென்றது.

**சரி... கல்லூரியில் காதல் மலர்ந்தது... ஆண்டவருக்கும் உங்களுக்கும் உள்ள உறவு எப்படி இருந்தது?**



எனக்கும் இயேசுவுக்கும் உள்ள உறவு துண்டிக்கப்பட்டு, அந்த பெண்ணுடன் என் இருதயம் இணைந்தது. என் வீட்டில் யாருக்கும் நான் சொல்லவில்லை. நான் வேதம் வாசிப்பதை நிறுத்தி விட்டேன். நாங்கள் கல்லூரி Campusயில் நடப்பது வழக்கம். அப்படி ஒருநாள் நடந்து போய்க் கொண்டிருக்கும் போது, சினிமாவில் வருவது போல அவள் கையைப் பிடித்து விட்டேன். விடுதிக்கு சென்ற பிறகு, ''நீ செய்வது தவறு'' என்று என் இருதயத்தில் சத்தம் கேட்டது. அதை நான் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. இந்த தப்பான காரியத்தை மறப்பதற்காக தவறான படங்களைப் பார்க்க ஆரம்பித்தேன். 7ம் வகுப்பு படிக்கும்போது, என் நண்பன் எனக்கு சொல்லிக் கொடுத்த அதே பாவத்தை திரும்ப செய்ய ஆரம்பித்தேன். ஆண்டவர் விடுதலை கொடுத்த பாவத்திற்குள் மீண்டும் விழுந்தேன். விடுதலை தேவனால் தான் தரமுடியும் என்று எனக்குத் தெரியும். ஆனால் சத்தியம் எனக்குத் தெரியவில்லை. இப்படி அந்தப் பெண்ணிற்காக தவறான காரியங்களை செய்துவிட்டு, இரவு முழங்கால்படியிட்டு அழுது பாவமன்னிப்பை கேட்பேன். இப்படியே விழுந்து விழுந்து எழும்புகிற வாழ்க்கையாகப் போய்க் கொண்டிருந்தது.



ஒருநாள் மத்தேயு 7:21-23ம் வசனங்களை வாசித்து தியானம் செய்து விட்டு, எனக்கு இந்த பாவத்தில் இருந்து விடுதலை வேண்டும் என்று ஆண்டவரிடம் ஜெபித்தேன். ஒருசில நாட்களுக்குப் பிறகு ஒருநாள் இரவில், வேதத்தை படிக்கும் போது நீதிமொழிகள் 6:27, நீதிமொழிகள் 5:18 என்ற வசனங்கள் என்னோடு பேசியது. காதல் செய்வதும், விபச்சாரம் செய்வதும் ஒன்றுதான் (மத்தேயு 5:28) என்பதை வேதத்தை படிக்கும் போது அறிந்தேன். அதனால் தான் என்னால் இயேசுவோடும், வேதத்தோடும் உறவு வைக்க முடியவில்லை. ''ஒரு சிறு குழந்தை தனது அறையை சுத்தம் செய்யும் போது, சிலந்தி பூச்சியைக் கொல்லாமல் ஒட்டடை மட்டும் அடித்துவிட்டு, ஏன் என் அறை அசுத்தமாக இருக்கிறது? என்று கேட்டதாம். சிலந்தியை முதலில் அடித்து கொல், அப்பொழுது உன் அறை சுத்தமாகும் என்று சொன்னார்களாம். அதுபோல சிலந்தியாகிய உன்னிடம் உள்ள இச்சையை வெறுத்து விடு, அப்பொழுது உன் உள்ளம் சுத்தமாகும். அதில் இயேசு வாசம் செய்வார்'' (கலாத்தியர் 5:24, 1 தீமோத்தேயு 2:22) என்று சாதுசுந்தர் சிங் கூறிய கதை, என் தாத்தா சிறுவயதில் சொன்னது நினைவுக்கு வந்தது. இந்த சத்தியத்தை நான் அறிந்த உடனே இயேசுவுக்கு என்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தேன். ''சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' (யோவான் 8:32) என்ற வசனத்தின்படி எனக்கு விடுதலை கிடைத்தது.

**சூப்பர்... பின்மாற்றத்தில் இருந்த நீங்கள், திரும்பவும் இயேசுவோடு உங்கள் உறவை புதுப்பித்துக் கொண்டீர்கள்... அதன்பிறகு தொடர்ந்து நிலைத்து நிற்க முடிந்ததா?**

நான் செய்தது தவறு, வேதத்தின்படி தான் நான் வாழ வேண்டும், என்னை மன்னித்துவிடு, என்று மன்னிப்பு கேட்டு அவளிடம் பேசுவதை நிறுத்தி விட்டேன். சில வாக்குவாதங்கள் வந்து, ஒரு முடிவுக்கு வந்தது. ஆனாலும் என்னால் அவளை மறக்க முடியவில்லை. மறுபடியும் அவளை விசாரிக்க ஆரம்பித்தேன். அப்பொழுது சுயத்தில் சாயாதே, வேதத்தில் நிலைத்திரு என்று நீதிமொழிகள் 3:5-7ம் வசனங்கள் மூலம் என்னை எச்சரித்தது. திரும்பவும் நான் அவளோடு பேசியதால் வாக்குவாதம் வர ஆரம்பித்து, சத்தியத்தை மறந்தேன். ''லோத்து மனைவியை நினைத்து கொள், பின்னிட்டு பாராதே, இனி பார்த்தால் உப்புத்தூண் தான்'' என வேதம் என்னை மறுபடியும் கண்டித்தது. அதன்பிறகு நான் பின்னிட்டு பார்க்கவில்லை. பிரசங்கி 12:1ம் வசனத்தின்படி தேவனிடத்தில் நெருக்கம் கிடைத்தது. அவளுக்கு பதிலாக இயேசுவும், என் செல்போனுக்கு பதிலாக பரிசுத்த வேதாகமுமாய் என் வாழ்க்கை மாறியது.

**இயேசுவுக்கும் உங்களுக்கும் ஒரு உறவு உருவானது... பழைய பாவங்களை எப்படி மேற்கொண்டீர்கள்?**

மூன்று மாதங்கள் வரைக்கும் நான் செய்த பாவங்கள் என் கண்களுக்கு முன்பாக சாத்தான் கொண்டு வந்து என்னை பயமுறுத்தினான். எனது பாவங்களை இயேசு மன்னித்தார் என்ற விசுவாசத்துடன் தொடர்ந்து வேதம் வாசித்து ஜெபிக்க ஆரம்பித்தேன். சகோ. சகரியா பூனன் அவர்கள் எழுதிய ஒரு புத்தகத்தை அந்த நாட்களில் படித்த போது, எனக்கு இன்னும் சில சத்தியங்கள் வேதத்தில் இருந்து தெரிய வந்தது. ''நிறைவான அன்பை நோக்கி பார்க்கும் போது குறைவான அன்பு காணாமல் போகும்'' என்பதை அறிந்து கொண்டேன். சாத்தான் என் பழைய பாவங்களைக் காட்டி என்னை சோர்வடைய பண்ணுவான். அப்பொழுது எல்லாம் ''இயேசுவின் இரத்தத்தினால் நான் நீதிமான்'' என்று சொல்லும் போது, அவன் என்னை விட்டு ஓடி விடுவான். இயேசுவின் அன்புக்கு இணை எதுவும் இல்லை என்ற சத்தியத்தை அறிந்து கொண்ட போது, இயேசுவை விட்டு சாத்தானால் என்னைப் பிரிக்க முடியவில்லை.





**சத்தியங்களைத் தெரிந்து கொண்டீர்கள்... ஆண்டவருடைய பிள்ளையாக மாறினீர்கள்... இப்பொழுது என்ன செய்கிறீர்கள்?**

படிப்பை முடித்து விட்டு முழுநேர ஊழியம் செய்து வந்தேன். அந்த நேரத்தில் சிறுவயதில் நான் ஒரு மிஷனெரியாக வேண்டுமென்று தீர்மானம் எடுத்ததை ஆண்டவர் எனக்கு நினைவுபடுத்தினார். இப்பொழுது Indian Missionary Society மூலமாக Missionary Training Centerயில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறேன். ''என்னை அழைத்தவர் உண்மையுள்ளவர்'' நான் சிறுவயதில் எடுத்த தீர்மானத்தை மறவாமல், என்னை மிஷனெரி பணிக்காக அழைத்து வந்திருக்கிறார். ''கர்த்தர் செய்ய நினைத்தது தடைபடாது'' தேவனுடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமாய் என் பயிற்சியைப் பெற்று வருகிறேன்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

முதலாவதாக நீங்கள் செய்வது பாவம் என்று ஏற்றுக் கொண்டாலே, 90% விடுதலை அடைந்து விடலாம். உங்கள் சுயத்தில் சாயாமல் வேதத்தின் சத்தியத்தில் நிலைத்திருங்கள், தினமும் வேதம் வாசித்து ஜெபம் செய்யுங்கள். தினமும் ஒரு நீதிமொழியை ஜெபத்துடன் படித்து, அதன்படி வாழ இயேசுவின் துணையை நாடுங்கள். ''கர்த்தரை உங்கள் மேய்ப்பராக வைக்கும் போது, நீங்கள் தாழ்ச்சி அடைவதில்லை''. கர்த்தருக்கு ஆடுகளானால் தான், கர்த்தர் நம் மேய்ப்பராய் இருப்பார். வேதத்தின் சத்தியத்திற்கு கீழ்ப்படிந்தால் தான், நாம் தேவனின் ஆடுகளாக இருக்க முடியும். நீங்கள் வேதத்தை வாசிக்க, ஜெபிக்க நேரத்தை செலவிடுங்கள். உலகத்தின் சிற்றின்பங்களுக்கு விலகி ஓடுங்கள் (1 யோவான் 2:15-17; 2 தீமோத்தேயு 2:22). நீங்கள் செய்த எல்லா பாவங்களையும், அக்கிரமங்களையும் மறைக்காமல் இயேசுவிடம் அறிக்கையிட்டு, அதை விட்டு விடுங்கள், அவர் கிருபை உங்களை சூழ்ந்து கொள்ளும். ''நீங்கள் கிருபைக்குள் இருந்தால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது''.

**அன்பான வாலிபர்களே! எப்படிப்பட்டதான பாவங்களையும் இயேசுவிடம் அறிக்கையிட்டு ஒப்புக்கொடுக்கும் போது, அந்தப் பாவங்களை மன்னித்து விடுதலை கொடுத்து ஊழியக்காரனாக மாற்றுவார் என்பதற்கு சகோதரர் ஜெனில் மேத்யூவின் சாட்சியே நமக்கு பொருந்தும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவற்றை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் என்ற வசனத்தின்படி, உங்களுடைய பாவங்களை அறிக்கை செய்யும் போது, ஆண்டவர் உங்கள் பாவங்களை மன்னித்து, உங்களையும் ஒரு பெரிய ஊழியக்காரனாக, ஊழியக்காரியாக மாற்றுவார்! குற்ற மனசாட்சியோடு வாழாமல், பாவத்தை இயேசுவிடம் அறிக்கையிட்டு விடுதலை பெற்று கர்த்தரில் நிலைத்திருங்கள்! ●**

# சிலுவை பணியை செய்ய ஓடு...



ஆலோசனை: அலி

## Heart Beat

நான் கல்லூரிப் படிப்பை முடித்து வேலைக்காக எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறேன். தற்பொழுது நான் என்னால் முடிந்த கைப்பிரதி ஊழியம் செய்து வருகிறேன். இதனால் எனக்குள் மிகுந்த மகிழ்ச்சி உண்டாகிறது. எப்பொழுதும் தனியாகவே சென்று பேருந்து நிலையம், வணிக வளாகம், கடற்கரை மற்றும் இரயில் நிலையங்களில் கவலையோடு தனிமையில் இருக்கும் நபர்களுக்கு கைப்பிரதி கொடுப்பேன். ஆனால் சில வாரங்களாக என்னால் போக முடியவில்லை. காரணம், என் பெற்றோர் என்னை தனியாக ஊழியம் செய்ய அனுப்புவதில்லை. யாராவது சென்றால் அவர்களுடன் செல் என்று சொல்கிறார்கள். மற்ற தோழிகள் கல்லூரி மற்றும் வேலைக்கு செல்வதால் நான் ஊழியத்திற்கு போகும் நேரத்தில் அவர்களால் வரமுடியாது என்று சொன்னார்கள். இதனால் என்னால் ஊழியத்திற்கு செல்ல முடியவில்லையே என்ற வேதனையும், துக்கமும் என்னை அழுத்துகிறது. ஒருசில நேரத்தில் என் பெற்றோர் காரணம் இல்லாமல், “நீயே சரியில்ல, நீ ஊழியம் செய்து என்ன பிரயோஜனம்” என்று மனது வலிக்கும்படியான வார்த்தைகளினால் திட்டுகிறார்கள். ஒரு பக்கம் ஊழியம் செய்ய முடியவில்லையே என்ற வருத்தம், மறுபுறம் என்னுடன் ஊழியம் செய்ய யாரும் இல்லையே என்ற வேதனை; இது தவிர என் பெற்றோரின் கடின வார்த்தைகள் இன்னும் என்னை மன உளைச்சலுக்குள் தள்ளுகிறது. நான் ஊழியம் செய்ய நினைப்பது தவறா? ஊழியம் செய்ய கூடாதா? எனக்கு சொல்லுங்கள் - ஆஷா, சென்னை.

அன்பு சகோதரி ஆஷா! சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்ற பாரமும், தாகமும் உங்கள் மனதின் ஆழத்தில் இருப்பதைக் கண்டு ஆண்டவரை துதிக்கிறேன். ஆனால் சுவிசேஷத்தை அறிவிப்பதினால் ஒரு பக்கம் வீட்டில் தேவையில்லாத திட்டு, மனதை கஷ்டப்படுத்தும் வார்த்தைகள், மேலும் உடன் ஊழியம் செய்ய யாரும் இல்லையே என்ற வேதனை உங்களை பாதிக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆஷா! ‘‘சுவிசேஷம் அறிவிப்பது நம்மேல் விழுந்த கடமை’’ என்று பவுல் 1 கொரிந்தியர் 9:16ல் வாசிக்கின்றோம். ஆனால் அநேக முறை நாம் நம்முடைய கடமையையும் செய்வதில்லை, தேவன் கொடுத்த கட்டளைக்கும் கீழ்ப்படிவதில்லை.

சகல ஜாதிகளை சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்பதே தேவன் பிரதானமாக நமக்கு சொன்ன கட்டளை (மத்தேயு 28:19). சுவிசேஷம் அறிவித்தால் தான் ஜனங்கள் இரட்சிக்கப் படுவார்கள், பாவத்தில் இருந்து விடுதலை யடைவார்கள், தேவனுடைய பிள்ளைகளாய் மாறுவார்கள் என்று ரோமர் 10:14ல் சொல்கிறது. அறிவிக்கப்படவில்லை என்றால் எப்படி இயேசுவை அறிந்துக் கொள்வார்கள்? எனவே நீங்கள் சுவிசேஷம்

அறிவிப்பது தேவனுடைய இருதயத்தை மகிழ்விக்கும் பணி. அதை செய்யாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம். ஆனால் அதை எப்படி சிறப்பாக செய்யலாம் என்று யோசிக்க வேண்டும்.

## பெற்றோரின் பாசம்...

- உங்கள் பெற்றோர் தனியாக உங்களை போக வேண்டாம் என்று சொல்வதின் காரணம், உங்களது பாதுகாப்பிற்காக மட்டுமே.
- அநேக நேரம் பெண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பது அனைத்து பெற்றோரின் கவலையும், ஆதங்கமும் என்றே சொல்லலாம்.
- மேலும் உங்களின் பாதுகாப்பிற்கு அவர்களே பொறுப்பு என்பதாலும், உங்கள் மேல் உள்ள அன்பினாலும் உங்களை போக வேண்டாம் என்று சொல்லலாம்.
- மேலும் உன் தோழிகளுடன் போ என்றும், தனியே போகாதே என்றும் சொல்வது உங்கள் மேல் உள்ள அன்பு என்று தெளிவாக தெரிகிறது.

## ஊழியத்தை தொடர்ந்து உற்சாகமாக செய்ய என்ன வழி?

- முதலில் ஜெபித்து ஒரு தோழியை கண்டுபிடியுங்கள்.
- அவர்களோடு இணைந்து ஜெபம் செய்யுங்கள், நேரில் வரமுடியவில்லை என்றால், செல்போனில் ஜெபியுங்கள். இந்த நாட்களில் Conference Call, Zoom Call ஜெபங்கள் அதிகமாகி விட்டது. ஜெபிக்காமல் இருப்பதற்கு பதிலாக ஏதாவது ஒரு முறையில் ஜெபிப்பது நல்லது.
- நீங்கள் ஜெபிக்கும் போது, உங்கள் தோழிக்கும் சுவிசேஷ பாரமும், ஆத்துமாக்களைக் குறித்த பாரமும் உண்டாகும்.







- நீங்கள் ஜெபிக்கும் போது உங்கள் பட்டணத்தில் தினந்தோறும் நடக்கும் பிரச்சனைகள், அதாவது செய்தித்தாளில் வரும் அத்தனை சம்பவங்களையும், ஒரு ஜெப குறிப்பாக மாற்றி ஜெபியுங்கள்.
- ஜெபிக்கும் நீங்கள் இருவரும் ஞாயிற்றுக் கிழமைகளில் இணைந்து சென்று, ஜெபத்தோடு கைப்பிரதி ஊழியம் செய்யலாம்.
- மேலும் இப்படி செய்வதால் உங்கள் பெற்றோரின் வார்த்தைக்கு நீங்கள் கீழ்ப்படிகிறீர்கள் என்று அவர்களும் சந்தோஷப்படலாம்.
- ஒரு போதும் ஊழியத்தை நிறுத்த வேண்டாம்.
- ஒருவேளை உங்கள் தோழி வரவில்லையென்றால், உங்கள் தந்தையையோ அல்லது உங்கள் சகோதரரையோ அழைத்து செல்ல முற்படுங்கள்.

உங்களின் சுவிசேஷம் அறிவிக்கும் பாரமானது, உங்கள் நண்பர்களையும், குடும்பத்தையும் பிடிக்கும் போது எழுப்புதலை பரவச் செய்யும் அக்கினி பற்றிப் படரும், தேவ பணி தங்கு தடையின்றி தொடரும்.

**இஸ்ரவேலிலிருந்து அடிமையாக சீரியாவுக்கு வந்த சிறுபெண் அமைதியாக இருந்திருந்தால், சீரியா படைத்தலைவனான நாகமான், தேவனுடைய அற்புத சுகத்தை அனுபவித்திருக்க மாட்டார். எனவே துணிந்து சொல்லுங்கள், தூயவரின் அன்பை சொல்லுங்கள் (2 இராஜா. 5:1-15).**

**"தொடர்ந்து செயல்படுங்கள், ஒன்றும் உங்களை தடுப்பதும் இல்லை, எதிர்ப்பதுமில்லை!"** ●



முகப்பு செய்தி: சதீஷ்

# சோர்வு!

ஓய்வு இல்லாமல் ஓடிக் கொண்டு இருக்கும்போது, இடையில் கொஞ்சம் ஓய்வு எடுப்பதற்கும், ஒன்றுமே செய்யாமல் சோம்பேறியாய் இருப்பதற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. ஓய்வு என்பது இதுவரை செய்து வந்த வேலையிலிருந்து சற்றே தள்ளி இருப்பது. ஆனால் சோர்வு என்பது அடுத்து என்ன செய்ய போகிறோம் என்றுகூட யோசிக்காமல் நம்மை அடுத்த நிலைக்கு போகாதபடிக்கு தடுப்பதாகும். சோர்வு உண்டாக காரணம் நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றங்கள், தோல்விகள், மனிதனுடைய வார்த்தைகள் என சொல்லிக் கொண்டே போகலாம். மின்சார பல்பைக் கண்டுபிடிக்க ஆயிரம் முறை தோல்வி அடைந்த போதும், தாமஸ் ஆல்வா எடிசன், தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்வியைக் கண்டு சோர்ந்து போகவில்லை. மாறாக அதற்கு அவர் அளிக்கும் பதில், ''நான் ஆயிரம் முறை தோல்வி அடையவில்லை, மின்சார விளக்கைக் கண்டுபிடிக்க ஆயிரம் படிகளைத் தாண்டி வந்தேன்'' என்றார். வெற்றி காணும் போது உற்சாகம் அடையும் நம்முடைய மனது, தோல்வி ஏற்பட்டவுடன் சோர்வு வந்து விடுகிறது. வெற்றி உற்சாகத்தைக் கொடுக்கும், ஆனால் தோல்வியோ ஞானத்தைக் கொடுக்கும்.

2022ஆம் ஆண்டு நடைபெற்ற காமன்வெல்த் பேட்மிண்டன் போட்டியில் P.V. சிந்து தங்கப் பதக்கத்தை வென்று, இந்தியர்கள் அனைவரின் உள்ளத்தையும் கவர்ந்தார். 2009ஆம் ஆண்டு முதல் பேட்மிண்டன் போட்டியில் விளையாட ஆரம்பித்த இவருடைய வாழ்க்கையில் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற ''ரியோ ஒலிம்பிக்'' மறக்க முடியாத போட்டியாகும். பேட்மிண்டன் போட்டியில் இறுதிச் சுற்றுக்கு சென்ற முதல் இந்தியரான இவர், இப்போட்டியில் கரோலினா மாரினிடம் தோல்வியைத் தழுவிய போதும் ஒலிம்பிக்கில் இந்தியாவிற்காக வெள்ளிப் பதக்கம் வாங்கிய முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றார். சாதனையின் உச்சிக்கு சென்ற இவர் பல போட்டிகளில் தோல்விகளைச் சந்தித்தார். 7 போட்டிகளில் வெள்ளி, வெண்கலம் வாங்கினார். பலமுறை போட்டியின் விளிம்பிற்கு சென்று தோல்வியைக் கண்டுள்ளார். ஒருபக்கம் தொடர்ந்து தோல்விகள், இன்னொரு பக்கம் ''நீங்கள் Gold Medal'' வாங்குவீர்களா? இல்லை மாட்டீர்களா? என்ற கேலி கிண்டல் பேசும் மனிதர்கள். இவை எல்லாவற்றையும் பார்த்து சிந்து சோர்ந்து போய் முடங்கி விடாமல், தன்னைத் தானே உற்சாகப்படுத்தி விளையாட ஆரம்பித்தார். தோல்வி நிரந்தரமல்ல என்பதை 2018-2019 உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் தங்கம் வாங்கி தன்னுடைய எல்லா தோல்விகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தார். அதுமட்டுமின்றி 2022 காமன்வெல்த் போட்டியில் தங்கம் வாங்கி அனைவரின்





கவனத்தையும் ஈர்த்தார். இந்த வெற்றியின் மூலம் தன்னை கேலி கிண்டல் பேசியவர்களின் வாய்களை அடைத்தார் சிந்து. உங்கள் வாழ்க்கையில் வரும் தோல்விகளைக் கண்டு சோர்ந்து போகாதீர்கள். தோல்விகளும் ஏமாற்றங்களும் வந்து உங்களை சோர்வுபடுத்தும் போதெல்லாம் நீங்கள் ஆண்டவரை நோக்கிப் பாருங்கள். ஏனெனில் ''சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிற'' (ஏசாயா 40:29) ஆண்டவர் அவர்.

கர்மேல் பர்வதத்தில் பாகால் தீர்க்கதரிசிகள் 450 பேரையும் யேசபேலின் பந்தியில் சாப்பிடுகிற தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் 400 பேரையும் வெட்டிக் கொன்று ''கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்'' என்று ஆண்டவரை விட்டு பின் வாங்கிப்போன ஜனங்களை கர்த்தர் பக்கம் திருப்பின எலியா, உன்னையும் பட்டயத்தாலே கொன்றுப் போடுவேன் என்று சொன்ன யேசபேலின் வார்த்தையைக் கேட்டு சோர்ந்து போய் தன் பிராணனைக் காக்க வனாந்திரத்திற்கு ஓடிப் போனார். அங்கே சூரைச் செடியின் கீழ் படுத்துக் கொண்டு தான் சாக வேண்டும் என்று சொல்லி புலம்ப ஆரம்பித்தார். சோர்ந்துப் போன எலியாவை ஆண்டவர் அப்படியே விட்டு விடவில்லை. தன்னுடைய தூதனை அனுப்பி அவரைப் பெலப்படுத்தினார். தேவன் தந்த பெலத்தால் அவர் மீண்டும் தன்னுடைய ஊழியத்தை செய்ய ஆரம்பித்தார்.



ஒருவேளை நீங்கள் படிக்கிற இடத்திலோ அல்லது வேலை செய்கிற இடத்திலோ மனுஷர்களின் வார்த்தைகளைக் கேட்டு சோர்ந்து போய் இருக்கலாம், அல்லது உங்கள் சொந்த குடும்பத்தினரின் வார்த்தைகள் நிமித்தம் உடைக்கப்பட்டு இருக்கலாம், நீங்கள் எதிர்பார்த்த வாழ்க்கை உங்களுக்கு அமையாமல் இருக்கலாம். இப்படி ஏதோ உங்கள் வாழ்வில் ஏற்பட்ட தோல்வியின் நிமித்தம் சோர்ந்து போன நீங்கள் ஆண்டவரின் முகத்தை நோக்கிப் பாருங்கள். ''அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை'' (சங்கீதம் 34:5) என்ற வார்த்தையின்படி, சோர்ந்து போய் முடங்கி போன எலியாவை மீண்டும் ஆண்டவர் எழுப்பி ஓட செய்தது போல, சோர்ந்து போன உங்களையும் பிரகாசிக்க செய்வார். நம் வாழ்க்கையில் போராட்டங்களும், தோல்விகளும் வரும் போது, பிசாசு நமக்கு சோர்வை கொண்டு வந்து ஆத்துமாவை சோர்வடைய செய்வான்.

ஆனால் கர்த்தரோ விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப் பண்ணி தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் பெலப்படுத்துவார் (எரே. 31:25).

**எனக்கன்பான வாலிபர்களே! உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றங்கள் மற்றும் தோல்வியினால் சோர்ந்து போய் இருக்கிறீர்களா? ஒவ்வொருநாளும் உங்கள் எதிர்கால வாழ்வைக் குறித்து கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா? கலங்காதீர்கள்! வாழ்க்கையில் எத்தனை போராட்டங்களும், பாடுகளும் வந்தாலும் சோர்வுக்கு இடம் கொடுக்காதீர்கள். "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி. 4:13) என்று நீங்கள் அறிக்கையிடுங்கள். உங்கள் சோர்வு நீங்கி புது பெலனால் நிரப்புவார். நீங்கள் எல்லா சூழ்நிலையிலும் இயேசுவை நோக்கிப் பாருங்கள், அவர் உங்களைப் பெலப்படுத்துவார்! ●**



# சுத்த இருதயத்தோடு கர்த்தரைத் தேடுங்கள்!

செய்தி: மோகன் சி. லாசரஸ்



**''இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்''** (மத்தேயு 5:8). நாம் ஜெபிக்கும்போது கர்த்தர் நம்முடைய முகத்தை பார்க்கிறதில்லை. கர்த்தர் இருதயத்தைப் பார்க்கிறார், ஆனால் மனுஷனோ முகத்தைப் பார்க்கிறான். நம்முடைய இருதயம் என்ன யோசிக்கிறது? நம் இருதயத்தில் என்ன யோசனை வந்துக் கொண்டிருக்கிறது? நம் இருதயம் எப்படி இருக்கிறது? என்று இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிறவர் நம் தேவன். இருதயத்தை தேவன் ஏன் பார்க்கிறார்? ''எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது,...'' (எரேமியா 17:9) என்று வேதம் சொல்கிறது. அதனால் தான் கர்த்தர் இருதயத்தைக் கவனித்துப் பார்க்கிறார். உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிக்கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (ஏசாயா 59:1,2). நீங்கள் முழு இருதயத்தோடு தேடுகிறீர்கள், தாகத்தோடு தேடுகிறீர்கள், ஆனால் பாவத்தை வைத்துக் கொண்டே தேடுகிறீர்கள். ஆனால் உங்களால் அவரைத் தரிசிக்க முடியவில்லை, அவருடைய குரலைக் கேட்க முடியவில்லை. ஏன்? உங்கள் பாவங்கள் அவருடைய முகத்தை மறைக்கிறது.

மனுஷனுடைய இருதயம் எப்படி இருக்கிறது என்று மருத்துவர் ஸ்கேன் செய்து, காண்பிப்பார்கள். அதை நாம் பார்க்க முடியும். ஆனால் உள்ளத்திற்குள் இருக்கிற பாவங்களை ஸ்கேன் எடுத்து மருத்துவரால் காண்பிக்க முடியுமா? அதை ஆவியானவர் தான் காட்ட முடியும். ஆவியானவர் ஸ்கேன் செய்து காண்பிப்பதற்கு நாம் இடம் கொடுக்க வேண்டும்.




''தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பாரும்...'' (சங்கீதம் 139:23,24) என்று சங்கீதக்காரன் சொல்கிறான். உள்ளத்திற்குள் பெருமை, எரிச்சல், இச்சை, கோபம் இருக்கிறதா என்று ஆவியானவர் ஸ்கேன் எடுத்து பார்த்தால் தெரிந்து விடும்.



மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகள், விபச்சாரங்கள், வேசித்தனங்கள், அசுத்தங்கள், காமவிகாரங்கள், சண்டைகள், பகைகள் இவையெல்லாம் புறப்பட்டு, மனுஷனைத் தீட்டுப்படுத்தும் (மாற்கு 7:21-23). இந்தப் பாவங்கள் தான் இயேசுவின் முகத்தை மறைக்கிறது.

எப்படி கண்டுபிடிப்பது? என் இருதயத்தை ஆராய்ந்து எனக்கு காண்பியும் என்று தேவ சமூகத்திற்கு சென்று, ஆவியானவர் ஆராய்ந்து பார்க்க இடம் கொடுங்கள். ஆவியானவர் உணர்த்துகிற பாவத்தை அறிக்கையிடும்போது, ஆவியானவர் உங்களுக்கு காண்பிப்பார்.



ஊழியத்தின் ஆரம்ப நாட்களில், ஒருநாள் பிரசங்கத்திற்கு வழக்கத்தின்படி உபவாசித்துக் ஜெபித்துக் கொண்டிருந்தேன். ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் கடந்தும், தேவ பிரசன்னத்தை என்னால் உணர முடியவில்லை. ஆண்டவர் என் அருகில் இருக்கிறார் என்பதைக் கூட என்னால் உணர முடியவில்லை. அவருடைய பிரசன்னத்தை உணராமல், ஆண்டவர் என்னோடு எப்படி பேச முடியும்? அவருடைய குரலை எப்படி கேட்க முடியும்? என்று எனக்குள் பெரிய தடுமாற்றம். ஸ்தோத்திரம் செய்து பார்க்கிறேன், பாட்டு பாடி பார்க்கிறேன், ஜெபம் செய்து பார்க்கிறேன் ஒன்றும் உணர முடியவில்லை. எங்கோ தவறு நடந்து விட்டது என்பதை உணர்ந்து, ஆண்டவரிடம் ஏன் என்னோடு பேச மறுக்கிறீர்? ஏன் உம்முடைய பிரசன்னத்தை என்னால் உணர முடியவில்லை? நீர் பேசாமல் நான் எப்படி பிரசங்கம் செய்ய முடியும்? என்னிடம் நீர் பேச வேண்டும் என்று போராடினேன். இரண்டு மணி நேரங்கள் கழித்து ஆண்டவர் பேச ஆரம்பித்தார். இரட்சிக்கப்பட்டிருக்கிறாய், அபிஷேகம் பெற்றிருக்கிறாய், அந்நிய பாஷை பேசுகிறாய், பாடுகிறாய், துதிக்கிறாய். ஆனால் சபையில் இருக்கிற ஒரு நபர் தவறாக பேசிவிட்டார் என்று சொல்லி, அவர் மேல் உனக்கு கசப்பு இருக்கிறது என்று கூறினார். நான் அவரிடம், சண்டை போடவில்லை, வாக்குவாதம் செய்யவில்லை, ஆனால் அவரைப் பார்க்கும்போது, என்னைப் பற்றி இப்படி பேசினவர் தானே என்ற கசப்பு எனக்குள் இருந்தது. அதை ஆண்டவர் ஸ்கேன் பண்ணிக் காண்பித்தார். இவ்வாறு ஆண்டவர் என் பாவத்தை உணர்த்திக் காட்டியவுடன், மனங்கசந்து ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்டேன். ஆண்டவர் என்னை அந்த நபரிடம் சென்று ஒப்புரவாகும்படி கூறினார். மிகவும் கடினமாக இருந்தது. ஆனால் ஆண்டவர் என்னுடன் பேசு வேண்டுமே என்பதற்காக, நான் அவரைப் பார்க்க அவர் வீட்டு கதவைத் தட்டினேன். கதவைத் திறந்து என்னைப் பார்த்து கோபத்துடன், எதற்கு வந்திருக்கிறாய் என்று கேட்டார். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்! உங்களைக் குறித்த ஒரு கசப்பு எனக்குள் இருக்கிறது, என்னை மன்னித்து விடுங்கள் என்று கூறி மன்னிப்பு கேட்டேன். அவர் என் கையை பிடித்து அழ ஆரம்பித்துவிட்டார். அதற்கு பிறகு திரும்ப எங்களுக்குள் ஒரு ஐக்கியத்தை தேவன் உண்டாக்கினார். நான் திரும்பி வீட்டுக்கு வந்து முழங்கால் போட்டு ஜெபிக்க ஆரம்பித்தவுடன், கர்த்தர் இறங்கி வந்து என்னோடு பேசினார், 'நீ என் சொல்லுக்கு கீழ்ப்படிந்ததால், இன்றைக்கு நடைபெறவிருக்கும் கூட்டத்திற்கு நான் வந்து நிற்பேன் என்றும், என்னென்ன அற்புதங்கள் நடக்கும் என்றும் இயேசு சொன்னார்'. ஆண்டவர் சொன்னது போலவே பெரிய அற்புதங்களைச் செய்தார். கர்த்தர் எதிர்பார்க்கிற பரிசுத்தம் இருக்கும் போது கர்த்தர் பேசுவார். வீட்டிற்குள், வேலை செய்கிற இடத்தில், தெருவில் உங்கள் பரிசுத்தம் பாதிக்கப்படாதபடி, உங்களை பரிசுத்தத்திற்குள் ஒப்புக்கொடுங்கள். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். ஆதித்திருச்சபை விசுவாசிகளைக் குறித்து, அப். 24:46,47ம் வசனங்களை வாசித்துப் பார்த்தால், அவர்கள் கபடமில்லாத இருதயத்தோடு இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது. அடுத்த நபரைப் பற்றி பேசத் தெரியாது, பொறாமைப்பட தெரியாது, அடுத்த நபரைப் பற்றி புறங்கூறவே தெரியாது, அந்த மாதிரி ஒரு கபடற்ற இருதயமுள்ளவர்களாக இருந்தார்கள். அதனால் தான் கர்த்தர், அவர்களோடு நடந்து, அவர்களை பயன்படுத்தி பெரிய எழுப்புதலை உண்டாக்கினார்.



சிறுபிள்ளைகளைப் போல நாம் மாற வேண்டும் என்று கர்த்தர் சொல்கிறார். சிறுபிள்ளைகள் ஒரு நேரம் சண்டைப் போட்டுக் கொண்டாலும், அடுத்த நேரம் தோளில் கையை போட்டுக் கொண்டு நிற்பார்கள். சிறுபிள்ளைகளுக்கு கபடு இருக்காது. அப்படிப்பட்ட இருதயம் நமக்கு வேண்டும். வேதப்புத்தகத்தை வாசித்து தியானிக்கும் போது, நாம் எவ்வளவு குறைவுள்ளவர்களாக இருக்கிறோம் என்று தெரியும்.

உங்கள் இருதயத்தை சோதித்துப் பாருங்கள். ஆவியானவர் உங்களை சோதிக்க இடம் கொடுங்கள். உலகத்தின் பார்வை சரியாக இருக்கும் அநேக காரியங்கள், தேவனுடைய பார்வையில் தவறாக இருக்கும். கர்த்தருடைய வசனத்தின்படி அது தவறாக இருக்கும். ஆவியானவர் நம்முடைய இருதயத்தைச் சோதித்து பார்க்க இடம் கொடுத்து, அந்த பரிசுத்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்போது, அவரோடு நெருக்கமாக வாழ முடியும்.

**அன்பான வாலிபர்களே! இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிக்க முடியும் என்று ஆண்டவரே சொல்லியிருக்கிறார். இருதயத்தை எப்படி சுத்தம் செய்வது? நானும் எவ்வளவோ முயற்சி செய்து பார்க்கிறேன், சில பாவங்களை விட முடியவில்லையே என்று நினைக்கிறீர்களா? இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். என் பாவத்தை கழுவி சுத்திகரியும் என்று ஒப்புக்கொடுக்க வேண்டும். அதுமாத்திரமல்ல, நானே உன்னை பரிசுத்தமாக்குகிற கர்த்தர் என்று சொல்கிறார். இயேசு பரிசுத்தமாக்கினால் தான் நம்மால் பரிசுத்தமாக வாழ முடியும். நம்முடைய முயற்சியினால் பரிசுத்தமாக முடியாது. என்னை பரிசுத்தப் படுத்தும் என்று ஒப்புக்கொடுத்து ஜெபிக்கும் போது சுத்த இருதயத்தைக் கொடுப்பார்! ●**

# சோர்ந்து போகாதே

**சோர்ந்துபோகிறவனுக்கு அவர்பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்." ஏசாயா 40: 29**

1. ஜெபம் செய்வதில் சோர்ந்து போகாமல் இருக்க வேண்டும்.சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும். (லூக்கா 18 :1)

2. நன்மை செய்வதில் சோர்ந்து போகாமல் இருக்க வேண்டும். நன்மை செய்வதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக. (கலாத்தியர் 6 : 9). நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும். (ஆதியாகமம் 4 :7).

3. கர்த்தர் கடிந்து கொள்ளும் போது சோர்ந்து போகாமல் இருக்க வேண்டும்.
என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே., அவர் கடிந்து கொள்ளும் போது சோர்ந்து போகாதே. (நீதிமொழிகள் 3 : 11) நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு, சிட்சிக்கிறேன்: ஆகையால் நீ ஜாக்கிரதையாய் இருந்து மனந்திரும்பு. (வெளி. 3 : 19).

4. நற்கிரியைகள் செய்வதில் சோர்ந்து போகாமல் இருக்க வேண்டும், சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். (ரோமர் 2:7). இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத்தேயு 5 : 16).

நிகழ்வு: கெத்சி கிளார்வின்

# ஜெபிப்போம் ஜெயமெடுப்போம்!

ஜெபம் என்றால் மிகவும் கடினமான வார்த்தைகளை உள்ளடக்கி, ஆழமான வேத ஞானத்தோடு எளிமையானதாக இருக்க முடியாதா என்றால், நிச்சயம் ஜெபங்கள் எளிமையானவைதான். இன்றைக்கு நாம் பார்க்கவிருக்கும் ஜெபம், எளிமையாக ஏறெடுக்கப்பட்ட எசேக்கியாவின் ஜெபம்.

எசேக்கியாவின் ஜெபம் என்றால் உடனடியாக நம் நினைவுக்கு வருவது, தன் ஆயுட்காலத்தைப் பதினைந்து வருடம் நீடித்துப் பெற்றுக் கொண்ட அவரது ஒரு ஜெபம் தான். ஆனால், அவர் தனக்காக மட்டும் ஜெபித்தவரல்ல, அவர் தன் வாழ்நாளெல்லாம் ஜெபிக்கிறவராகவே இருந்தார். எசேக்கியாவின் ஜெபத்தை சற்று தியானிப்போம் வாருங்கள்!

## தன் ஜனங்களுக்காகத் தேவனிடத்தில் செய்த ஜெபம்

ஜனங்களில் சிலர் தேவ வார்த்தைக்குக் கீழ்ப் படியாதவர்களாக இருந்தபோது, அவர்களை தேவன் பக்கமாய் திரும்ப அறிவுறுத்தினார். மேலும் அவர்களுக்காக விண்ணப்பமும் செய்தார். ''கிருபையுள்ள கர்த்தர் அவர்கள் எல்லாருக்கும் மன்னிப்பாராக'' என்பதே எசேக்கியாவின் விண்ணப்பமாக இருந்தது (2 நாளாகமம் 30:19). அந்தப் பரிந்து பேசிய ஜெபத்தைத் தேவன் கேட்டு ஜனங்களுக்கு அனுகூலம் செய்தார்.

## இக்கட்டான சூழலில் செய்த ஜெபம் (2 இராஜாக்கள் 19:14–19)

சனகெரிப் என்னும் அசீரிய இராஜா அனுப்பிய அவனது தளபதியான ரப்சாக்கே என்பவன் யூதாவுக்கு விரோதமாக வந்து எசேக்கியாவை மிகவும் கேவலமாகப் பழிக்கவும், ஏளனமாகப் பேசவும் தொடங்கினான். ''நான் உனக்கு இரண்டாயிரம் குதிரைகளைக் கொடுப்பேன்; நீ முடிந்தால் அவைகள் மேல் ஏற ஒரு இரண்டாயிரம் பேரைச் சம்பாதிக்கக் கூடுமானால், அசீரியா இராஜாவுக்கு எதிர்த்து நில்'' என்றெல்லாம் சவால் விட்டுப் பேசியது, எசேக்கியா இராஜாவை மிகவும் வருத்தத்தில் ஆழ்த்தியது. அதன் பின் இதைவிட அசிங்கமாகவும் பேசத் துவங்க, இராஜா அவனுக்கு பதில் ஏதும் சொல்லாமல், தேவ சமூகத்திற்குச் சென்றார். தன் இருதயத்தை ஊற்றினார். இதைப் பற்றி அபயமிட்டார் என்றும் ஒரு இடத்தில் வாசிக்கிறோம். பயத்தின் மத்தியில் தேவனை நம்பிக் கேட்ட உதவிக்கான கூக்குரல் இது. நாமும் பயப்படும் நாளில் கர்த்தரையே நம்புவோம். ''கர்த்தர் என் பட்சத்தில்; நான் பயப்படேன்; ஒரு மனிதன் எனக்கு என்ன செய்துவிட முடியும்?'' என்று சொல்வது விசுவாச ஜெபம். நம் ஜெபங்களிலும், ''இக்கட்டு நாளில் அவரே அரணான கோட்டை. என்னைத் தப்புவிப்பவரும், விடுவிப்பவரும் அவரே'' என்பதை ஜெபத்தில் கூறி நினைவுகூருவது அவசியம்.



## தனது சுகத்திற்காக செய்த ஜெபம்

மரணத்திற்கு ஏதுவான வியாதியில் எசேக்கியாவின் கதறல் கேட்கப்பட்ட ஜெபம் இது (2 இராஜாக்கள் 20; ஏசாயா 38; 2 நாளாகமம் 32). தான் தேவனுக்கு முன்பாக 'மன உண்மையாயிருந்ததை நினைத்தருள வேண்டும்' என்று எசேக்கியா அழுது விண்ணப்பம் செய்தார். அந்த ஜெபத்திற்குத் தன் பதிலாக தேவன் ஒரு வாக்குத்தத்தம் செய்து, அதற்கு ஒரு அடையாளத்தையும் தந்து எசேக்கியாவின் ஆயுட்காலத்தையும் நீடித்துத் தந்தார். ''என்னை நினைத்தருளும்'' என்கிற எளிய ஜெபம் இது. இதில் அழுகையும், ''சுகம் தாரும்'' என்கிற விண்ணப்பமும் மட்டுமே இருந்தது. அதிக வசனிப்பானதல்ல, ஆனால் தேவன் இருதயங்களை அறிகிறவர் என்பதால் சொல்லப்படாத வார்த்தைகளையும், அறிந்தவராக எசேக்கியாவின் மன்றாட்டைக் கேட்டு பதில் அளித்தார்.

வாலிபர்களே! இப்படிப்பட்ட தாழ்மையான எளிமையுள்ள விண்ணப்பங்களையே எசேக்கியா இராஜா ஏறெடுத்தார். நாம்கூட எசேக்கியா ஏறெடுத்தது போல எளிய முறையிலும் ஜெபங்களை செய்யலாம். நாமும் இதுபோன்று ஜெபங்களை செய்து விடுதலையைப் பெற்றுக் கொள்ளலாம் ●

சாதனை: சுடா



# பக்குவப்படுத்தும் பள்ளங்கள்...

சாதிக்கத் துடிக்கும் இளம் சாதனையாளர்களுக்கு, என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். பிறக்கும்போதே எவரும் சாதனையாளர்களாக பிறப்பது இல்லை. ஒவ்வொரு சூழ்நிலைகளும், பிரச்சனைகளும், தோல்விகளும், மனிதனை மெருகேற்றி, சாதனையாளர்களாக மாற்றுகின்றன. தோல்விகள், ஏமாற்றங்கள் வரும்போது சோர்ந்து கீழே விழுந்தாலும், அடுத்த நொடியே தன்னம்பிக்கையோடு எழுந்து நிற்பவர்கள் மாத்திரம் தான், வெற்றியாளர்களாக மாற முடியும். இதை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள் ஏதோ ஒரு இடத்தில் சோர்ந்து உள்ளீர்களா? கவலை வேண்டாம். உங்களை தன்னம்பிக்கையோடு எழச்செய்ய இந்த சாதனையாளரின் வாழ்க்கை பயணம் உங்களுக்காக.

கோல்பி ஸ்டீவன்சன் (Colby Stevenson) என்பவர் அக்டோபர் 3, 1997 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்தார். ஸ்டீவன்சன் சிறுவயதாக இருக்கும் போது, இவருடைய பெற்றோர் ஸ்டீவன்சனை பனி சறுக்கு விளையாட்டு போட்டியை காண அழைத்துச் சென்றனர். பனி சறுக்கு விளையாட்டு போட்டியைக் கண்ட ஸ்டீவன்சனுக்கு மிகுந்த மகிழ்ச்சியும், உற்சாகமும் உண்டானது. இதனைக் கண்ட ஸ்டீவன்சனின் பெற்றோர் இவரை பனி சறுக்கு பயிற்சி பள்ளியில் சேர்த்தனர். நாளாக நாளாக ஸ்டீவன்சன், பனி சறுக்கு விளையாட்டை மிக நேர்த்தியாக கற்றுக் கொண்டார். இவருக்கு 10 வயது இருக்கும் போதே பனி சறுக்கு விளையாட்டில் தேறினவராக மாறினார். பனி சறுக்கு போட்டியில் பங்குபெறும் வீரர்களை சந்தித்து பல நுட்பங்களை கற்றுத் தெரிந்து கொண்டார். உள்ளூரில் நடைபெற்ற பல்வேறு பனி சறுக்கு போட்டிகளில் பங்கேற்று வெற்றியும் பெற்றார். இதைகண்ட ஸ்டீவன்சனின் பயிற்சியாளர், உள்ளூரில் வெற்றி பெற்றால் மட்டும் போதாது, தேசிய அளவிலான போட்டிகளிலும் பங்கேற்க வேண்டும் என உற்சாகப்படுத்தினார். அது மட்டுமல்லாமல் ஒலிம்பிக்கில் பங்கேற்று பதக்கம் பெற வேண்டும் என தன்னம்பிக்கை ஊட்டினார். அன்று முதல் ஸ்டீவன்சன், ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க கடினமான பயிற்சிகளை மேற்கொள்ள தொடங்கினார்.

ஸ்டீவன்சனின் வாழ்க்கையில் எல்லாம் சரியாகவும் மகிழ்ச்சியாகவும் சென்று கொண்டிருந்த நேரத்தில், தாங்கிக் கொள்ள முடியாத ஒரு கடினமான சூழ்நிலையை அவர் வாழ்வில் சந்தித்தார். ஒருநாள் பனி சறுக்குப் போட்டி ஒன்றில் பங்கேற்று 'அந்த வாரத்தின் சிறந்த சறுக்கு வீரர்' என்ற பட்டத்தையும் பெற்றார். அதுவே ''அவரது வாழ்க்கையின் சிறந்த பனிச்சறுக்கு' என்று கூறி மிகவும் மகிழ்ந்தார். போட்டியில் பங்கேற்று விட்டு தன் நண்பன் ஜான் ஃபேப்ரிஸியுடன் காரில் வீடு திரும்பி கொண்டு இருந்தார். விளையாட்டில் பங்கேற்ற தன் நண்பன் ஃபேப்ரிஸி, காலை முறித்துக்கொண்டதால், அவரை பின் இருக்கையில் அமர வைத்து ஸ்டீவன்சனே காரை ஓட்டினார். விளையாட்டில் ஏற்பட்ட களைப்பு, நெடுந்தூரப்பயணம் ஆகியவை ஸ்டீவன்சனை மிகவும் சோர்வாக்கியதால், காரை தொடர்ந்து ஓட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. எனவே சிறிது நேரம் காரை ஓரமாக நிறுத்திவிட்டு, பிறகு பயணம் செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே ஸ்டீவன்சன் கட்டுப்பாட்டை இழந்தார். கார் அதிவேகமாக இயங்கத் தொடங்கியது. என்ன நடக்கிறது என்று நிதானிக்கும் முன்பே, கார் உருண்டோடி பள்ளத்திற்குள் விழுந்தது. காரின் மேற்கூரை முற்றிலுமாக சிதைந்து போனது. இதனால் ஸ்டீவன்சனின் உடலில் பலத்த காயங்கள் ஏற்பட்டன. தலையில் இருந்து ரத்தம் வடிந்து கொண்டே இருந்தது. அவரின் மண்டை ஓட்டில் 30க்கும் மேற்பட்ட எலும்பு முறிவுகள் ஏற்பட்டிருந்தது. அவரது நண்பர் ஃபேப்ரிஸிக்கு ஒரு சேதமும் ஏற்படாததால் அவர் உடனே மருத்துவமனைக்கு தொடர்பு கொண்டு நடந்ததை கூறினார். ஸ்டீவன்சன் உயிர் போகும் நிலையில் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.



மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க ஆரம்பித்தாலும் இவருடைய தலையில் இருந்து ரத்தம் வடிந்து கொண்டே இருந்தது. மருத்துவர்கள் ஆலோசித்து, ஸ்டீவன்சனை செயற்கை முறையில் கோமாவிற்கு மாற்ற முற்பட்டனர். இயற்கையாக கோமா நிலை ஏற்பட்டால் சிகிச்சை அளித்து, நாளடைவில் மாற்றம் ஏற்பட கூடும். ஆனால் செயற்கையாக கோமாவிற்கு சென்றால் வாழ்க்கை முழுவதும் பார்வை இழக்க நேரிடும். இத்தனை இக்கட்டான சூழ்நிலைகள் இருந்தாலும் மருத்துவர்கள் ஸ்டீவன்சனின் உயிரை காப்பாற்ற முற்பட்டு, சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.




மூன்று நாட்களுக்கு பிறகு கண்விழித்தவுடன் முதலாவதாக ''இனி நான் பனிச்சறுக்கு போட்டியில் பங்கேற்க முடியுமா?'' என்று மருத்துவரை பார்த்து கேட்டார். அதற்கு அந்த மருத்துவர் நீங்கள் மருத்து வமனையில் அனுமதிக்கப் படும்போது, உயிர்பிழைப்பது கஷ்டம் என்று அநேகர் சொன்னார்கள். ஆனால் எங்களுடைய விடாமுயற்சியான சிகிச்சையால் கோமாவிலிருந்து கண்விழித்து, உயிர் பிழைக்கவும் செய்தீர்கள். எனவே தன்னம்பிக்கையோடு தொடர்ந்து ஓடுங்கள் என்று தைரியம் ஊட்டினார். என்னதான் தைரியம் கொடுத்தாலும், ஸ்டீவன்சனால் தனது கால்களை சிறிதும் அசைக்க முடியவில்லை. மூன்று மாதங்களுக்கு பிறகு தான் மெதுவாக தன் கால்களை அசைக்க தொடங்கினார்.

ஆறு மாதங்களுக்கு பிறகு தான் நிமிர்ந்து நிற்க முடிந்தது. பிறகு மெதுவாக நடக்க ஆரம்பித்தார். அதன் பிறகு ஓடத் தொடங்கினார். அதிவேகமாக ஓடத் தொடங்கினார். ஒரு வருடத்திற்கு பிறகு தான் கடுமையான பயிற்சியை மேற்கொள்ள தொடங்கினார். பனி சறுக்குப் போட்டி என்பது சாதாரணம் இல்லை. பள்ளங்களைக் கடக்க வேண்டும். பனி சறுக்கில் ஏறி இறங்கும்போது, கொஞ்சம் கால் தவறினாலும் பலத்த காயங்கள் ஏற்படும். ஆனால் இவையெல்லாம் ஸ்டீவன்சனை தடுத்து நிறுத்த முடியவில்லை. பல்வேறு பயிற்சிகளுக்கு பிறகு தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்று, வெற்றியும் கண்டார். தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றாலும், தனது பயிற்சியாளர் ஊக்குவித்தது போல, ஒலிம்பிக்கில் தங்கம் பெறுவதே ஸ்டீவன்சனின் இலக்காக இருந்தது. இன்னும் அதிவேகமாக பயிற்சிகளை மேற்கொண்டார்.

2022 பீஜிங்கில் (Beijing) ஒலிம்பிக் போட்டி ஆரம்பமானது. ஸ்டீவன்சன் அமெரிக்கா நாட்டின் சார்பாக பனி சறுக்கு போட்டியில் பங்கேற்க தேர்வு செய்யப்பட்டார். முதல் சுற்று ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே ஸ்டீவன்சன் தடுமாற தொடங்கினார். எத்தனையோ பிரச்சனைகள் போராட்டங்களை சகித்தது, இந்த ஒரு நாளுக்காக தான் என்று நினைத்து, தன்னுடைய முழு ஆற்றலையும் ஒன்றாக சேர்த்து, அதிவேகமாக செல்லத் தொடங்கினவர் அதிவேகமாக முன்னேறி தன் இலக்கை அடைந்தார். இலக்கை அடைந்த பிறகு தான் ஸ்டீவன்சனுக்கு உயிரே வந்தது. எல்லாம் சரியாக இருந்தாலும், முதல் சுற்றில் ஏற்பட்ட தடுமாற்றத்தால் தங்கப் பதக்கத்தை இழந்து வெள்ளிப் பதக்கத்தை பெற்றார். இதில் சிறிய வருத்தம் இருந்தாலும், உயிர் போகும் என்ற நிலை மாறி, ஒலிம்பிக்கில் வெள்ளி பதக்கம் பெற்றதே பெரிய சாதனை என்று எண்ணினார்.

சில நாட்களுக்கு முன்பு, ''நீ உயிர் பிழைத்து வந்ததே பெரிய விஷயம் என்று சொன்னார்கள். பிறகு எழுந்து நடக்கத் தொடங்கின போது, எழுந்து நடப்பதே ஆச்சரியமான காரியம் என்று சொன்னார்கள். பயிற்சியை மேற்கொண்ட போது, பயிற்சி மேற்கொள்வதே பெரிய காரியம், இது போதும், இனி விடாப்பிடியான பயிற்சி எதுவும் செய்யாதே என்று கூறினார்கள். என்னுடைய ஒவ்வொரு சூழ்நிலையிலும் இது மட்டும் போதும் போதும் என்று அநேகர் கூறினார்கள். ஆனால் நான் படுக்கையில் இருந்து எழுந்தேன், நடந்தேன், ஓடினேன், இன்று வெற்றியாளனாக உங்கள் முன்னால் நிற்கிறேன். என்னால் சாதிக்க முடியும் என்றால், உங்களாலும் முடியும். முயன்றால் முடியாதது என்று எதுவுமே இல்லை என்று கூறினார்.

**இதை வாசிக்கும் வாலிபர்களே, ஸ்டீவன்சனால் இனி எதுவுமே முடியாது என்று சுற்றி இருந்தவர்கள் கூறியபோதும், அவருக்குள் இருந்த விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் அவரை சாதிக்கச் செய்தது. மற்றவர்களால் கிரகிக்க முடியாத உயரத்தை அடையச் செய்தது. ஸ்டீவன்சனுக்குள் இருந்த அதே தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் உங்களுக்குள் இருக்குமானால், உங்களாலும் எதையும் சாதிக்க முடியும்.**

**முயன்று பாருங்கள்!!**

**காட்டுவீர்கள்!!**

# சோர்ந்து போகாமல் பெற்றுக் கொண்டவர்கள்!

## யவீரு



ஜெப ஆலயத்தலைவனாகிய யவீரு இயேசுவைப் பார்த்தவுடன் அவர் பாதத்தில் விழுந்து, என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியமடையும்படிக்கு நீர் வந்து அவள் மேல் உம் கைகளை வையும், அப்பொழுது அவள் பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக் கொண்டான். இயேசு அவனோடுக் கூட போகையில், 12 வருடமாய் பெரும்பாடுள்ள ஸ்திரீ தன் பணத்தையெல்லாம் செலவழித்தும் தன் பெலவீனம் மாறாமல் இருந்ததால், இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் தான் தொட்டால் சுகமடைவேன் என்ற விசுவாசத்துடன், இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டாள். அவள் தொட்ட மாத்திரத்தில் இயேசு கிறிஸ்துவிடமிருந்து வல்லமை புறப்பட்டு அவளை சுகப்படுத்தியது. அப்பொழுது இயேசு என்னைத் தொட்டது யார் என்று கேட்டார். அதற்கு சீஷர்கள் திரளான ஜனங்கள் உம்மை சூழ்ந்து நெருங்கிக் கொண்டிருக்கிறார்களே, உம்மைத் தொட்டது யார் என்று எப்படி கண்டுபிடிப்பது என்று சொல்லி பேசிக் கொண்டிருக்கையில் அந்த ஸ்திரீ வந்து, அவள் சொஸ்தமானதை ஜனங்களுக்கும், இயேசுவுக்கும் முன்பாக அறிவித்தாள் (லூக்கா 8:46-48). இந்த காரியங்கள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, தன் மகளை மரணத் தருவாயில் வைத்துக் கொண்டு, இயேசு வந்து தொட்டால் சுகமாகும் என்று காத்திருந்த அந்நேரத்தில் ஜெப ஆலயத்தலைவனின் வீட்டிலிருந்து ஒருவன் வந்து உம்முடைய குமாரத்தி மரித்துப் போனாள், போதகரை வருத்தப்படுத்த வேண்டாம் என்றான் (லூக்கா 8:49). இயேசு இதைக் கேட்டு, ''பயப்படாதே விசுவாசமுள்ளவனாயிரு'' என்றார் (லூக்கா 4:50). யவீரு இதைக் கேட்டு சோர்ந்து போகாமல், இயேசுவை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். இயேசு மரித்துப்போன மகளை உயிரோடெழுப்பினார்.

**அன்பான வாலிபர்களே! ஒருவேளை இன்றைக்கு என் வாழ்க்கையில் எல்லாம் முடிந்து விட்டது என்று நினைத்து மனம் சோர்ந்து போய் இருக்கிறீர்களா? பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு என்று இயேசு உங்களோடு தான் சொல்கிறார். யவீருவைப் பாருங்கள், சோர்ந்து போகாமல் இயேசுவை விசுவாசித்தான்! மகள் உயிர் பெற்றாள்!**

## பர்திமேயு குருடன்

இயேசு சிலுவையில் மனுகுலத்திற்காக ஜீவனைக் கொடுப்பதற்கு முன்பு, கடைசிமுறையாக எருசலேமிற்கு எரிகோவின் வழியாக போகும் போது, பர்திமேயு என்னும் குருடன் பிச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் எத்தனை வருடங்களாக குருடனாக இருந்தான் என்று தெரியவில்லை. ஆனால் இயேசு வருகிறார் என்ற நற்செய்தியைக் கேட்டவுடன், இயேசுவை எப்படியாவது பார்க்க வேண்டுமென்று தீர்மானித்தான். இயேசு அருகில் வருகிறதை அறிந்து இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான். இயேசுவோடு வந்த சீஷர்கள் பர்திமேயுவை அதட்டினார்கள். ஆனால் அவனோ சோர்ந்து போகாமல் தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று இன்னும் அதிகமாகக் கூப்பிட்டான். இயேசுவோடு வந்தவர்களால் அவன் சத்தமிடுவதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இயேசு அவனுடைய கூப்பிடுதலைக் கேட்டு அவனை அழைத்து வரும்படி சொன்னார். பர்திமேயு, தன் மேல் வஸ்திரத்தை எறிந்து விட்டு எழுந்து இயேசுவினிடத்தில் வந்தான். நான் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று இயேசு கேட்டார். அதற்கு அவன், ஆண்டவரே நான் பார்வையடைய வேண்டும் என்றான். இயேசு உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றவுடன் அவன் பார்வையடைந்தான். இயேசுவுக்குப் பின் சென்றான் (மாற்கு 10:46-52).



**அன்பான வாலிபர்களே! பர்திமேயுவை சீஷர்கள் அதட்டின போதும் சோர்ந்து போகாமல், இயேசுவை எப்படியாகிலும் பார்க்க வேண்டுமென்று அவன் தீர்மானித்து, விசுவாசத்துடன் பெற்றுக் கொண்டான். நீங்கள் கூட அநேக முறை முயற்சித்தும் பயனில்லை என்று சோர்ந்து போனீர்களா? பர்திமேயு போல இடையூறுகள் வந்தாலும் சோர்ந்து போகாமல் பெற்றுக்கொள்ளும் வரை முயன்று பாருங்கள்! பெற்றுக் கொள்வீர்கள்!**

## தாவீது



தாவீது, கர்த்தரால் இராஜாவாக அபிஷேகிக்கப்பட்டவன். ஆனால் சவுல், தாவீதை மிகவும் விரோதித்து, அவனைக் கொலை செய்ய துரத்தினான். ஓடி களைத்துப்போன தாவீது ஒரு கட்டத்தில் மிகவும் சோர்ந்து போய், நான் என்றைக்காவது ஒருநாள் சவுலின் கையினால் மடிந்து போவேன் என்று சொல்லி, சவுல் கண்டுபிடிக்க முடியாதபடி அண்டை நாடான பெலிஸ்தியரின் தேசத்திற்குப் போய், தப்பித்துக் கொள்ள யோசித்து (1 சாமு. 27:1,2), அவனும் அவனுடைய 600 மனிதர்களும் அவர்களுடைய அத்தனை குடும்பங்களும் பெலிஸ்திய இராஜாவாகிய ஆகீசினிடத்திற்கு போய் அடைக்கலம் தேடினார்கள். ஆகீஸ் இராஜா அவர்கள் தங்குவதற்காக சிக்லாகு என்ற இடத்தைக் கொடுத்தார். அங்கே சில காலம் அவர்கள் தங்கி இருந்தார்கள். ஆனால் தாவீதும் அவன் 600 மனுஷர்களும் இல்லாத நேரத்தில் அமலேக்கியர் வந்து, அவர்களுடைய மனைவி, பிள்ளைகள் மற்றும் உடமைகளைக் கொள்ளையடித்துச் சென்றார்கள். இதையறிந்த தாவீது துக்கத்தால் நிறைந்தவனாய், அழுகிறதற்கு பெலனில்லாமல் போகுமட்டும் அழுதான் (1 சாமு. 30:4). அவனுடைய மனிதரும் அவனை கல்லெறியும்படி முயற்சித்தார்கள். சிக்லாகு தாவீதிற்கு பெரிய சோர்வை ஏற்படுத்தியது. அவனுடைய அவிசுவாசமும், அவனுடைய சுயசித்தமுமே அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீதை சோர்வுபடுத்தியது.

**அன்பான வாலிபர்களே! தாவீதைப் போல நீங்களும் அவிசுவாசமாக செயல்பட்டாலோ, சுயசித்தத்தை செய்வதாலோ சோர்வுகள் ஏற்படும். தாவீது எல்லாவற்றையும் ஆண்டவரிடத்தில் கேட்டு செய்கிறவனாய் இருந்தான். ஆனால் சிக்லாகு என்ற இடத்திற்கு சென்றவுடன் தான் தோன்றியபடி தீர்மானம் எடுத்ததால், அவன் வாழ்க்கையில் பெரிய சோர்வு உண்டானது. நீங்கள் எப்படி?**

## பேதுரு



இயேசுவின் 12 சீஷர்களில் ஒருவரான சீமோன் பேதுரு, ஒருநாள் இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் மீன் ஒன்றும் கிடைக்காததால் சோர்ந்து போய் இருந்தார். பேதுருவுக்கு எந்த இடத்தில், எந்த நேரத்தில் எப்படிப்பட்ட மீன்கள் கிடைக்கும் என்று நன்கு தெரியும். அப்படியிருந்தும் ஒரு மீனும் கிடைக்காததால் சோர்ந்து போன உள்ளத்தோடு படகை விட்டிறங்கி, தனது வலைகளை அவரது சகோதரனுடன் அலசிக் கொண்டிருந்தார். அந்த வேளையில் இயேசு கெனேசரேத் கடலருகே நின்றுக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் ஜனங்கள் அவருடைய வார்த்தையைக் கேட்கக் கூடினார்கள். அப்பொழுது பேதுருவின் படகில் நின்று போதகம் செய்வதற்கு அவரது படகை இயேசு கேட்கிறார். இயேசு போதகம் பண்ணி முடித்தவுடன் சோர்ந்து போன உள்ளத்தோடு இருக்கும் பேதுருவை நோக்கி, "...ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார்" (லூக்கா 5:4). அதற்கு பேதுரு, இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை, ஆனாலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்று சொல்லி வலையைப் போட்டார். இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஆழத்தில் படகைத் தள்ளிக் கொண்டு போய் வலையைப் போட்டபோது வலைகள் கிழியும்படியான மீன்களைப் பிடித்தார். பேதுருவும், யாக்கோபும், யோவானும் இதைப் பார்த்து பிரம்மித்து நின்றனர்.

**அன்பான வாலிபர்களே! எவ்வளவோ பிரயாசப்பட்டும் எனக்கு வேலை கிடைக்கவில்லையே, படிக்க முடியவில்லையே என்று சோர்ந்து போய் இருக்கிறீர்களா? பேதுரு தன் படகை இயேசுவுக்குக் கொடுத்தது போல நீங்களும் உங்கள் இருதயத்தை இயேசுவிடம் கொடுங்கள்! சோர்வுகள் மாறி சந்தோஷத்தை இயேசு கொடுப்பார்!**

# RED Alert

அனனியா - சப்பீராள்

நிகழ்வு: காலேப்

இந்த ரெட் அலர்ட் தொடரில் ஒவ்வொரு மாதமும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், அவர்கள் செய்த சிறிய தவறினாலும், பாவத்தினாலும் தேவ அழைப்பையும், திட்டத்தையும் விட்டு விலகி போனதைப் பற்றி தியானித்து வருகிறோம். இவை அனைத்தும் கடைசி காலத்தில் வாழ்கின்ற நமக்கு தேவன் கொடுக்கும் எச்சரிப்பின் சத்தமாக இருக்கிறது. இதை வாசிக்கிற நாம், எந்தக் காரியத்தில் நம்மை சரி செய்து கொள்ள வேண்டும் என்பதை அறிந்து, அதைச் சரி செய்து கொள்ள வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார். இந்த மாதம் ரெட் அலர்ட் பகுதியில் பெந்தெகொஸ்தே நாள் அன்று எருசலேமில் ஊற்றப்பட்ட எழுப்புதலை பார்த்து, அதை அனுபவித்த பின்பும் அவர்கள் செய்த தவறினால் தேவ கோபத்திற்குள்ளான அனனியா-சப்பீராள் தம்பதியைக் குறித்து தியானிக்கப் போகிறோம். தேவ கோபம் அவர்கள் மேல் வருகிற அளவிற்கு என்ன செய்தார்கள் என்று பார்ப்போம்.

## சுயநலம்!

எழுப்புதல் எருசலேமில் ஊற்றப்பட்ட நாள் முதல் ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கான மக்கள் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டு கொண்டே இருந்தனர். 'விசுவாசிகள் அனைவரும் ஒரே இருதயமும் ஒரே மனமுள்ளவர்களாயிருந்தார்கள்' என்றும் ஒருவரும் தனக்கென்று ஒன்றும் வைத்து கொள்ளவில்லை என்று வேதம் சொல்கிறது (அப். 4:32). அநேகர் தங்களிடமிருந்த சொத்துக்களை, நிலங்களை விற்றார்கள் என்றும் போடப்பட்டிருக்கிறது. இப்படி சுயநலமில்லாமல் தங்களுக்கென்று ஒன்றும் வைத்துக் கொள்ளாமல் இருந்த கூட்டத்தில் வாழ்ந்தவர்கள் தான் அனனியா-சப்பீராள். இப்படிப்பட்ட ஒரு காலத்தில், இந்த கூட்டத்தில் அனனியாவும், சப்பீராளும் இருந்தாலும் அவர்கள் இருதயம் மற்ற விசுவாசிகளைப் போல இல்லை, அவர்கள் இருதயத்தை சாத்தான் நிரப்பியிருந்தான் (அப். 5:3). அவர்களும் தங்கள் பங்கிற்கு நிலங்களை விற்றார்கள். ஆனால், அதின் முழு கிரயத்தைக் கொடுக்காமல், அதில் ஒரு பங்கை தங்களுக்கென்று வஞ்சித்து வைத்துக் கொண்டார்கள். அதற்கு காரணம் சுயநலம், இந்த சுயநலம் அவர்களின் அழிவிற்கு ஆரம்பமாக அமைந்தது. நாம் எவ்வளவு நேரம் எழுப்புதலுக்காக ஜெபித்தாலும், உபவாசித்தாலும், எழுப்புதல் கூட்டங்களில் பங்கு பெற்றாலும் நமக்குள் சுயம் சாகாமல், சுயத்திற்காகவும், பெயர் பிரஸ்தாபத்திற்காகவும் ஊழியம் செய்தால் தேவன் நம்மை எழுப்புதலில் பயன்படுத்த முடியாது.



வாலிபர்களே! இந்த கடைசிக்கால எழுப்புதலுக்காக தெரிந்துகொள்ளப்பட்ட நமக்குள் சுயநலம் இருக்கிறதா? என்று

நிதானித்து பார்த்து சுயத்தை சாம்பலாக்க நம்மை அர்ப்பணிப்போம்.

## மாய்மாலம்

விசுவாசிகள் அனைவரும் நிலங்களையும், சொத்துக்களையும் விற்று அப்போஸ்தலர் பாதத்தில் கொண்டு வந்து வைத்தார்கள். அதைப் பார்த்த மற்ற அனைவரும் அவர்களைப் பாராட்டியிருக்கக்கூடும். அதுமட்டுமல்ல, அந்த நகரம் முழுவதும் அதைப் பற்றி பேசியிருக்கக்கூடும். இந்தக் காரியங் களை எல்லாம் பார்த்து தன்னைப் பற்றியும் மக்கள் இப்படி பேச வேண்டும், அனைவரும் தன்னை புகழ வேண்டும் என்கிற எண்ணத்தோடு தன் நிலத்தை விற்று அதின் முழு கிரயத்தைக் கொடுக்காமல், பாதியை மட்டும் கொடுத்தான் அனனியா. ஆனாலும், முழு கிரயத்தையும் கொண்டு வந்தது போல் தன்னை காண்பித்து கொண்டான். அவன் காணிக்கை கொண்டு வந்த நோக்கம், மற்றவர்கள் தன்னை பார்க்க வேண்டும், புகழ வேண்டும் என்பதற்காகவேயன்றி தேவனுக்காக கொண்டுவரவில்லை. இதுதான் மாய்மாலம். இயேசு பரிசேயர்கள், சதுசேயர்களைக் கடிந்து கொள்ளும்போது, மாயக்காரரே என்று தான் கடிந்து கொண்டார். தேவன் அருவருக்கிற ஒரு பாவம் மாய்மாலம். உள்ளே பாவத்தையும், தீமையையும் வைத்துக் கொண்டு வெளியே நல்லவனைப் போல காண்பித்து கொள்வதுதான் மாய்மாலம். அனனியாவின் மாய்மாலத்தின் நிமித்தம் தேவ கோபம் அவனுக்கு நேராக வந்தது.





வாலிபர்களே, நம்முடைய இருதயம் எப்படி இருக்கிறது? உள்ளே பாவத்தை வைத்துக் கொண்டு வெளியே பரிசுத்தமாய் இருப்பதுபோல் காண்பித்து கொண்டிருப்போமானால், நாம் மற்றவர்களையல்ல நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். எனவே மனந்திரும்ப கொடுக்கப்பட்ட இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக் கொள்வோம்.

## பரிசுத்த ஆவிக்கு விரோதமான பொய்!

அனனியா, தான் விற்ற நிலத்தின் கிரயத்தை பேதுருவிடம் கொண்டு வந்தான். மற்றவர்கள் பார்வைக்கு தியாகத்தோடு கொண்டு வந்து கொடுப்பது போல் காண்பித்தான். ஆனால் பரிசுத்த ஆவியானவர் அனனியாவின் மாய்மாலத்தை வெளிப்படுத்தினார். ஏனென்றால், அனனியா மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னான் (அப். 5:4). நம் தேவன் இருதயங்களை ஆராய்ந்து ஊடுருவி பார்க்கிறவர், அவருக்கு முன்பாக அனைத்தும் வெளியரங்கமாக இருக்கிறது. பரிசுத்த ஆவிக்கு விரோதமாக பொய் சொன்னபடியால், அவன் அங்கேயே விழுந்து தன் ஜீவனை விட்டான். அதைத் தொடர்ந்து வந்த அவன் மனைவி சப்பீராளும் பொய் சொல்லி அதே ஆக்கினையை அடைந்தாள். அனனியாவும், சப்பீராளும் எழுப்புதலை பார்த்தும், அனுபவித்தும், அதில் நிலைநிற்க முடியாமல் போய் விட்டது.

**அன்பான வாலிபர்களே! அனனியா-சப்பீராள் சம்பவத்தை மேலோட்டமாக வாசிக்கும் போது, ஒரு பொய் சொன்னதற்காக இவ்வளவு பெரிய தண்டனையா என்று நாம் யோசிக்கலாம். இதை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள் செய்கின்ற காரியம் தேவனுக்கு பிரியமாக இருக்கிறதா? என்பதை வேதத்தின் அடிப்படையில் சிந்தித்துப் பாருங்கள். எழுப்புலுக்கு தடையாக நமக்குள் இருக்கும் சுயம், பெருமை, மாய்மாலம் மற்றும் சில பாவங்களை தேவன் நமக்கு உணர்த்தி அதிலிருந்து விடுதலை பெற உதவி செய்வார் ●**

அடுத்த மாதம் இன்னொரு நபரோடு Red Alert பகுதியில் சந்திக்கலாம்...

எழுப்புதல் சதிஷ்

# சுத்திகரிப்பின் எழுப்புதல்!

எழுப்புதல் அக்கினி ஒரு தேசத்தின் மீதோ அல்லது குறிப்பிட்ட சமுதாயத்தின் மீதோ ஊற்றப்படும் போது, அந்த தேசம் அல்லது அந்த சமுதாயம் சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தம் உண்டாகிறது. அநேகர் மனந்திரும்பி தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு கர்த்தர் பக்கம் திரும்புகின்றனர். ஆசா அரசாண்ட நாட்களில் தன் தேசத்தில் அந்நிய தேவர்களின் பலி பீடங்களையும், மேடைகளையும் அகற்றி, இவைகளை உடைத்து தேசம் முழுவதையும் சுத்திகரித்து ஜனங்களை கர்த்தர் பக்கம் திருப்பினான். "...அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருக்கிறதைக் கண்டு, இஸ்ரவேலிலிருந்து திரளான ஜனங்கள் அவன் பட்சத்தில் சேர்ந்தார்கள்" (2 நாளா. 15:9). இவன் நாட்களில் ஜனங்கள் தங்கள் முழு இருதயத்தோடும், தங்கள் முழு மனதோடும் கர்த்தரைத் தேடினார்கள். இப்படி ஆண்டவர் ஒரு மனிதனைத் தெரிந்து கொண்டு முழு தேசத்தையும் சுத்திகரித்தார்.



19ம் நூற்றாண்டில் இடம் பெற்ற எழுப்புதல்களை இரண்டாம் பெரிய ஆவிக்குரிய மறுமலர்ச்சி என்பார்கள். இந்த நூற்றாண்டில் டைட்டஸ் கோன் (Titus Coan) என்ற தேவ மனிதனைக் கொண்டு ஆண்டவர் திரளான ஜனங்களை தன் பக்கம் திருப்பினார். இவரின் நாட்களில் சபைகள் சுத்திகரிக்கப்பட்டு சபை விசுவாசிகளுக்கு நடுக்கமும், அழுகையும், கதறுதலும் உண்டாயின. இவரின் நாட்களில் சபைகளை பரியாசம் செய்கிறவர்கள், குடிகாரர், விபச்சாரம் செய்வோர், கொலை பாதகர் மற்றும் திருடர்கள் என அநேகர் மனந்திரும்பி கர்த்தர் பக்கம் சேர்க்கப்பட்டனர். இதனால் அந்த சமுதாயமே முற்றிலும் தேவன் பக்கம் திரும்பியது. இவர் மூலமாக ஒரு வருடத்தில் 5244 பேர் சபையில் சேர்க்கப்பட்டனர். ஓர் ஓய்வு நாளில் 1705 பேர் ஞானஸ்நானம் பெற்றனர். கர்த்தரின் பந்தியில் 2400 பேர் பங்கு பெற்றார்கள். இவர்கள் எல்லோரும் ஒரு காலத்தில் கொடிய பாவிகளாய் இருந்தவர்கள். இப்பொழுதோ தேவனுடைய பரிசுத்தவான்களாக இருக்கிறார்கள். கடந்த ஊரடங்கு நாட்களில்கூட தேவனை மறந்த அநேக கிறிஸ்தவ தேசங்கள் சுத்திகரிக்கப்பட்டு கர்த்தர் பக்கம் திரும்பியுள்ளது. நம் நாட்டிலும்கூட தேவனை மறந்து தன் சுய இச்சைகளின்படி வாழ்ந்து வந்த அநேகருடைய வாழ்க்கை சுத்திகரிக்கப்பட்டு மறுரூபமாகியுள்ளது.



அன்பு சகோதரனே, சகோதரியே! இந்த எழுப்புதல் செய்திகளை நாம் வாசிக்கும் போது, நம் தேசமும் சபைகளும் சுத்திகரிக்கப்பட்டு எழுப்புதல் அடைய வேண்டும் என்ற வாஞ்சை ஏற்படுகிறதல்லவா? நாம் எழுப்புதலுக்காக ஊக்கமாய் ஜெபிக்கும் போது, பரிசுத்த ஆவியானவர் நம் சபைகளிலும், தேசத்திலும் எழுப்புதலை தருவார் என்பது நிச்சயம். ஆண்டவரே வரப்போகிற எழுப்புதலில் என்னையும் பயன்படுத்தும் என்று நீங்கள் இயேசுவை நோக்கி மன்றாடும் பொழுது அவர் உங்கள் மூலமாக தேசத்தில் திரளான ஜனங்களை இரட்சிப்பார்.

அடுத்த மாதம் இன்னொரு எழுப்புதலின் செய்தியோடு உங்களை சந்திக்கிறேன்...

நிகழ்வு கெத்சி கிளார்வின்



## வேதாகமத்தில் பறவைகள்

# ஆந்தை



இந்த மாதத்தில் நாம் பார்க்கவிருக்கும் பறவை "ஆந்தை".

### ஆந்தை பற்றிய சில உண்மைகள்...

* ஆந்தை ஒரு இரவு நேரப் பறவை. பகலில் தூங்கி இரவில் சுறுசுறுப்பாக இருக்கும்.
* இரவு நேரங்களில் மட்டும் செயலாற்றும் இனத்தைச் சார்ந்தது.
* இவை பிற உயிரினங்களைக் கொன்று இரையாக்கிக் கொள்ளும் பறவை இனம்.
* இவை ஐந்து அங்குலம் முதல் இரண்டு அடி நீளம் வரைக்கும் உள்ள பறவைகள்.
* இதனுடைய சிறகுகள் மிகவும் மென்மையானவைகள். ஆகவே, இது பறக்கும்பொழுது எந்த விதமான ஒலியையும் உண்டாக்காது.
* மற்ற பறவை இனங்களைப் போல் அல்லாமல் இதனுடைய முகம் தட்டையாகவும், வட்டமாகவும் இருக்கும்.
* இதன் கூரிய வளைந்த அலகுகளைச் சுற்றிலும் சிறிய வளைந்த விறைப்பான இறகுத்தண்டுடன் கூடிய இறகுகள் இருக்கும்.
* இதன் வட்டமான முகத்தில் வட்டமான பெரிய கண்கள் இருக்கும். இதற்கு கொம்புகள் போன்ற இரண்டு காதுகள் உண்டு.
* ஆந்தை முதல் முட்டையிட்டவுடன் அடைகாக்க ஆரம்பித்து விடும்.

ஆந்தையின் கூச்சல் பலவிதமானவை. மிகவும் சத்தமாகவும், தாழ்ந்த சுருதியிலும் இதன் ஓசை இருப்பதால் வெகுதூரம் இவற்றின் குரலொலியைக் கேட்க முடியும். தனது இனத்தைக் கண்டு கொள்ளவும், தான் இருக்கும் பகுதியைத் தெரியப்படுத்தவும் ஆந்தை தனது குரலை பயன்படுத்துகின்றது.

### வேதாகமத்தில் ஆந்தை

வேதாகமத்தில் ஆந்தை அசுத்த பறவைகளில் ஒன்றாக குறிப்பிடப்படுகிறது (லேவி. 11:13-19, உபா. 14:16). பொதுவாக ஆந்தைகள் இடிபாடுகளுக்கிடையிலும், பாழடைந்த கட்டிடங்களிலும், கல்லறைத் தோட்டங்களிலும், மரப்பொந்துகளிலும் வாழ்கின்றன (சங். 102:6). இதுபோன்று வேறு சில இடங்களிலும் ஆந்தையைக் குறித்து வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் காண முடிகின்றது. ஆந்தையை போன்ற வியாகுலங்கள், வருத்தங்கள் நம்மை சூழ்ந்தப்போதிலும், கர்த்தர் நம் அடைக்கலமாய் இருக்கிறார் என்ற விசுவாசமே நம்மை முன்னோக்கி செல்ல வைக்க ஏதுவானது ஆகும். ஆந்தை காகத்தைவிட வலிமை மிக்கப் பறவை. ஆனால் ஆந்தைக்கு பகலில் கண் தெரியாது. அதனால் ஆந்தையைப் பகலில் மிக எளிமையாக காகம் வென்றுவிட முடியும். காகம் ஆந்தையின் பலவீனமான அந்த நேரத்தைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி மிக எளிதாக தோற்கடித்து விடும். இரவு நேரத்தில் காகம் ஆந்தையிடம் மோதினால் தோல்வி தான் மிஞ்சும். அதுபோன்று தான் நாமும் நமது எதிரியான சாத்தானின் பெலவீனத்தை நமது பலமாக்கி எங்கே? எப்படி? எந்த இடத்தில்? எந்த சூழலில்? அவனை வீழ்த்த முடியும் என்பதை அறிந்து, அந்த நேரம் பார்த்து அவனை தாக்கும் போது நிச்சயம் நாம் வெற்றி பெறுவோம். சாத்தான் தலை நசுக்கப்படும் என்பது உண்மை.

அன்பு வாலிபர்களே! வாழ்க்கையில் எவ்வித சூழ்நிலையிலும் கர்த்தரை விசுவாசிப்போம்! அவரையே அடைக்கலமாய் கொள்ளுவோம்!

"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர்" (சங்கீதம் 44:1) ●

ஊழிய பயணம் வயலா

# பேதுருவின் அற்புத சுகமளிக்கும் வல்லமை!

Petra

பேதுருவோடு ஒரு பயணம்...

பகுதி 9

இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் வரை, இயேசு மட்டுமே அற்புதங்கள் செய்து கொண்டிருந்தார். இயேசுவின் பரமேறுதல் நிறைவேறிய போது, இனி சுகமாக்கும் அற்புதத்தை செய்ய யாருமில்லை என்று மக்கள் கவலை அடைந்திருந்தனர். தேவாலய வாசலில் பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சை கேட்கும்படி தினமும் உட்கார்ந்திருந்த சப்பாணியின் எண்ணமும் அதுவாகவே இருந்தது. ஜெப வேளையாகிய ஒன்பதாம் மணி நேரம் என்னும் மாலை மூன்று மணி அளவில் தேவாலயத்தில் பிரவேசிக்க போகிற பேதுருவையும் யோவானையும் கண்டு அவன் பிச்சை கேட்டான். சப்பாணியின் மனதில், ஐயோ! இயேசு மட்டும் இந்தப் பூமியில் இருந்திருப்பாரானால், நான் தேடிப் போய் சுகம் பெற்று விடுவேனே, எத்தனையோ பேருக்கு சுகம் கொடுத்ததை பல பேர் சொல்லிக் கேட்டு இருக்கிறேனே, நான் இயேசுவை தவற விட்டு விட்டேனே என்ற ஏக்கம் இருந்திருக்கலாம். எனவே தான் பேதுரு தங்களை நோக்கிப் பார்க்கச் சொல்லியிருக்கலாம். சப்பாணியும் கூட ஒருவேளை ஆவிக்குரிய கண்களில் அவன் தேடிய இயேசு அவர்களுக்குள் இருப்பதை கவனித்திருப்பான். இயேசுவால் மட்டும் தான் சுகம் கொடுக்க முடியும். இவர்கள் பெரிதாக என்ன கொடுத்து விடப்போகிறார்கள் என்று யோசித்திருக்கலாம். ஆனால் நோக்கிப் பார்க்க சொல்கிறார்களே என்று அவர்களை நோக்கிப் பார்த்தான். உடனே பேதுரு, ‘‘...என் நாமத்தினாலே... வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்’’ (மாற்கு 16:17,18) என்ற இயேசுவின் வார்த்தை நிறைவேறும் விதமாய், நசரேயனாகிய இயேசுவின் நாமத்திலே எழுந்து நட என்று சொல்லி பேதுரு தூக்கி விட்ட உடனே, சப்பாணியின் கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. வாழ்க்கையில் முதன்முதலாக அந்த சப்பாணி குதித்து எழுந்து நின்று நடந்தான். எத்தனை மகிழ்ச்சி! இயேசு பரமேறிய பின்பு அவருடைய சீஷர்களால் நடைபெற்ற முதலாம் அற்புதம் இது. இனி ஒருபோதும் இயேசுவின் அற்புதத்தை பார்க்க முடியாது என்று மக்களுக்கு இருந்த ஏக்கம் அன்று பேதுருவால் விலக்கப்பட்டது. ஜனங்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டு பிரமித்துக் கொண்டிருக் கையில், பேதுரு தன் சுயசக்தியினாலாவது, சுயபக்தியினாலாவது சப்பாணியை நடக்க பண்ணவில்லை என்றும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமம், இயேசுவின் நாமமே இவனைப் பெலப்படுத்தி நடக்கச் செய்தது என்று கூறி மகிமையை இயேசுவுக்கு செலுத்தியது அவருடைய உண்மை சீஷத்துவத்தை வெளிப்படுத்துகிறது.



பேதுருவும், ஐனேயாவும் (அப். 9:32-35) பேதுரு தான் செய்து வந்த சுவிசேஷ ஊழியம், எச்சரிப்பின் ஊழியம், அற்புத சுகமளிக்கும் ஊழியம், எழுப்புதலின் ஊழியத்தோடு வீடு சந்திப்பு ஊழியமும் செய்யும்படி லித்தா ஊரில் குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கு போனார். அங்கே எட்டு வருஷமாய் திமிர்வாதமுள்ளவனாய் கிடந்த ஐனேயாவை சந்திக்கிறார்.

அவரிடம் ஐனேயாவே, நான் உன்னை சுகமாக்குகிறேன் என்று சொல்லாமல், இயேசு கிறிஸ்து உன்னை குணமாக் குகிறார் என்று சொல்லி படுக்கையை விட்டு எழுந்திருக்க பண்ணி, இயேசு கிறிஸ்துவுக்கே மகிமையைச் சேர்க்கிறார். இந்த அற்புதத்தின் மூலம் லித்தாவிலும், சாரோனிலும் குடியிருந்தவர்கள் எல்லாரும் கர்த்தரிடம் திரும்பினார்கள் என்று வேத வசனம் (அப். 9:35) கூறுகிறது.



## பேதுருவும், தபீத்தாளும் (அப். 9:36-42)

யோப்பா பட்டணத்தில் கிரேக்கு பாஷையில் தொற்காள் என்று அர்த்தம் கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய சீஷி, நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய் செய்து கொண்டு வந்தாள். அவள் யாருக்கும் பிரசங்கித்ததாக வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் கிறிஸ்துவின் போதனைகளைக் கைக்கொண்டு தன்னுடைய வாழ்வில் கிறிஸ்துவை பிரதிபலித்தாள். அவள் நோய்வாய்ப்பட்டு மரித்தபோது, அவளால் நன்மை பெற்றவர்களால் அவளது இழப்பைத் தாங்க முடியவில்லை. அங்கு கூடியிருந்த மற்ற சீஷர்களும் யாரும் இயேசுவின் நாமத்தில் அற்புதம் செய்ய முயற்சிக்கவில்லை. மாறாக அவர்கள் மனம் பேதுருவை தேடியது. யோப்பா பட்டணம் லித்தா ஊருக்கு சமீபமானபடியால் (பத்து மைல் என்று வேத வல்லுநர்கள் கூறுகின்றனர்) அவ்விடத்தில் இருக்கிற பேதுருவை தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரும்படி அழைக்க இரண்டு மனுஷரை பேதுருவிடம் அனுப்புகிறார்கள். பேதுருவும் சூழ்நிலையை உணர்ந்து தாமதிக்காமல் உடனே அவர்களுடன் கூடச் செல்கிறார். தபீத்தாள் செய்திருந்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் காண்பித்து விதவைகளெல்லாரும் அழுது, பேதுரு ஏதாவது செய்யமாட்டாரா? என்று அவரை சூழ்ந்து நிற்கின்றனர். யாவீரு மகளை உயிரோடெழுப்பிய போது, இயேசு செய்தது போல (மாற்கு 5:40) பேதுருவும் எல்லாரையும் வெளியே போகச் செய்கிறார். பின் தன்னைத் தாழ்த்தி, முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணுகிறார். அதன் பின்னர் விசுவாசத்துடன் பிரேதத்துடன் பேசி எழுந்திருக்கக் கட்டளைக் கொடுக்கிறார். தொற்காளும் பேதுருவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள். பேதுரு அவளுக்கு கைலாகு கொடுத்து எழுந்திருக்கப்பண்ணி பரிசுத்தவான்களையும், விதவைகளையும் அழைத்து அவர்களது எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் விதமாய் தொற்காளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்தினார். இது யோப்பா பட்டணம் எங்கும் தெரிய வந்து அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.



பேதுரு கல்லாதவராயிருந்தும், எந்த ஒலிபெருக்கியும் இன்றி பிரசங்கித்து 3000, 5000 என்று ஆத்துமாக்களை சபையில் சேர்த்தார். இப்பொழுது பேதுருவின் அற்புத சுகமளிக்கும் வரத்தினால், எந்த விளம்பரமும் இன்றி பட்டணம் பட்டணமாக திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகி கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள். பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின் மேலும் கிடத்தி, பேதுரு நடந்து போகையில் அவருடைய நிழலாகிலும் அவர்களில் சிலர் மேல் படும்படிக்கு அவர்களை வெளியே வீதிகளில் கொண்டு வந்து வைத்தார்கள். சுற்றுப் பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்கு கொண்டு வந்தார்கள். அவர்கள் எல்லோரும் குணமாக்கப்பட்டார்கள் (அப். 5:14-16). ஒருவரும் குணமாகாமல் வந்த வண்ணமாகவே திரும்பவில்லை. என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் (யோவான் 14:12) என்ற இயேசுவின் வார்த்தைகள் பேதுருவின் கிரியைகளால் உறுதிப்படுத்தப்படுகிறது. ஒரு தேவ மனுஷனால், முழு எருசலேமிலும், சுற்றுப் பட்டணங்களிலும் உள்ள யாவரும் ஆசீர்வதிக்கப்படுகின்றன.

**பேதுருவின் பயணம் தொடரும்...**

ஜெபம்: எஸ்தர்

# ஜெபக்கையேடு




## சாலை விபத்துகள்

கடந்த 2017ம் ஆண்டு முதல் 2020ம் ஆண்டு வரை அதிக சாலை விபத்துகள் நடைபெற்றுள்ளது. 2017ம் ஆண்டு 17,926 பேரும், 2018ம் ஆண்டு 18,394 பேரும், 2019ம் ஆண்டு 18,129 பேரும், 2020ம் ஆண்டு 14,527 பேரும் சாலை விபத்துகளினால் உயிரிழந்துள்ளனர். 2017 முதல் 2020ம் ஆண்டு வரையிலான 4 ஆண்டுகளில் விபத்து எண்ணிக்கை 12 சதவீதத்திலிருந்து 83 சதவீதமாக உயர்ந்துள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் விபத்துகள் மற்றும் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. நாடு முழுவதும் கடந்த 2021ம் ஆண்டில் நடந்த சாலை, ரயில் மற்றும் ரயிவே கிராசிங் போன்ற போக்குவரத்து விபத்துகளின் புள்ளிவிவரங்களை தேசிய குற்ற ஆவண காப்பகம் வெளியிட்டுள்ளது. கடந்த ஆண்டு 4.03 லட்சம் சாலை விபத்துகளும், ஒரு லட்சத்து 55 ஆயிரத்து 622 பேர் பலியாகி உள்ளனர். 3 லட்சத்து 71 ஆயிரத்து 884 பேர் காயமடைந்துள்ளனர்.

## ஜெபக்குறிப்புகள்

1. சாலை விபத்துகளினால் ஏற்படும் மரணங்கள் முற்றிலும் தடுக்கப்பட ஜெபிப்போம்.

2. சாலை விபத்துகளினால் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்படுகின்றனர். சாலை விதிமுறைகளை கையாள ஜெபிப்போம்.

3. மது அருந்தி கொண்டும், மொபைலில் பேசிக் கொண்டும் வாகனங்களை ஓட்டுவதினால் அநேக விபத்துகள் ஏற்படுகிறது. இவை சரிசெய்யப்பட ஜெபிப்போம்.

4. சாலை விதிகளை பின்பற்றி அதன்படி வாகனங்களை ஓட்டுவதற்கு பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

5. சாலை விதிகளை கையாளதவர்களின் உரிமங்களை ரத்து செய்து, சரியான நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

## பெண்களுக்கு எதிரான குற்றங்கள்

டெல்லியில் கடந்த 6 மாதங்களில் 1,100 பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளனர். 2704 பெண்கள் கடத்தப்பட்டுள்ளனர். இதனால் தலைநகர் டெல்லியில் பெண்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகி உள்ளது. டெல்லியில் பாலியல் பலாத்காரம் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நடப்பு ஆண்டில் ஜூலை 15ம் தேதி வரை 1,100 பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளனர். கடந்தாண்டு பெண்கள் மீதான தாக்குதல் வழக்குகள் 1,244 என்ற அளவில் இருந்த நிலையில் நடப்பாண்டில் இதுவரை 1,480 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. டெல்லியில் இந்தாண்டு 2197 பெண்கள் கடத்தப்பட்டுள்ளனர். குடும்ப வன்முறைக்கு 2704 பெண்கள் ஆளாகி உள்ளனர். வரதட்சணை கொடுமை தொடர்பாக 69 பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒட்டு மொத்தமாக தலைநகரில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 17% அதிகரித்துள்ளதாக புள்ளிவிவரம் வெளியிடப்பட்டுள்ளது.



# CRIMES AGAINST WOMEN

## ஜெபக்குறிப்புகள்

1. பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்படுவது அதிகரித்து வருவது தடுக்கப்படவும், பெண்கள் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.

2. ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான பெண்கள் கடத்தப்பட்டு, சித்ரவதைக்கு ஆளாவது தடுக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

3. பெண்கள் தாக்கப்பட்டு வழக்குகள் தொடுக்கப்பட்டு நிலுவையில் இருக்கின்றன. குடும்பத்தில், சமுதாயத்தில் பெண்கள் தாக்கப்படுவது தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.

4. குடும்ப வன்முறையால் பெண்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பெண்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாக உள்ளது. இந்த நிலைமை முற்றிலும் ஒழிய ஜெபிப்போம்.

5. வரதட்சணைக் கொடுமையால் பெண்களின் வாழ்க்கை சீரழிக்கப்படுவதோடு, தற்கொலை செய்வதும் அதிகரித்து வருகிறது. இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் பெண்கள் விழிப்புடன் காணப்பட ஜெபிப்போம்.

## போதைப் பொருட்கள்

இந்தியாவில் இவ்வாண்டில் இதுவரைக்கும் 6 டன்னுக்கும் மேல் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதில் 5 கோடி பேர் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி உள்ளனர். இந்தியாவில் போதைப் பொருட்களை 7.34 கோடி பேர் பயன்படுத்துகின்றனர். பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களிடையே போதைப் பொருட்கள் (மாத்திரைகள்) அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில் இளம் வாலிபர்கள் 20 லட்சம் பேர் கஞ்சாவையும், 40 லட்சம் பேர் போதை மாத்திரைகளையும், 30 லட்சம் பேர் உள்ளிழுக்கும் போதை மருந்துகளையும் பயன்படுத்துகின்றனர். போதைப் பொருளுக்கும், மதுவுக்கும் அடிமையானதால் இளம் வயதிலேயே தங்கள் வாழ்க்கை முடிவுக்கு வரும் சூழ்நிலை உருவாகிறது.



## ஜெபக்குறிப்புகள்

1. போதைப் பொருட்களின் விற்பனையைத் தடுக்க இந்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

2. இளைஞர்களை சீரழிக்கும் போதைப் பொருட்களை அரசு தடை செய்ய ஜெபிப்போம்.

3. பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியரின் பாதுகாப்பிற்காகவும், அவர்கள் மத்தியில் விழிப்புணர்வு உண்டாகவும் ஜெபிப்போம்.

4. போதைப் பொருட்களை பயன்படுத்துகின்ற 7.34 கோடி பேரும் அதிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

5. இப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் சிறுபிள்ளைகள் இதிலிருந்து விடுவிக்கப்படவும், தகுந்த ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட அரசு முயற்சி எடுக்கவும் ஜெபிப்போம்.

# சோர்ந்து போகாதே!



**என் அன்பு வாலிபத் தம்பி மற்றும் தங்கைகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! உங்கள் அனைவரையும் கிறிஸ்து இயேசுவிலும், தேவனுடைய வசனத்திலும், ஆவியானவரோடான உறவிலும் நாள்தோறும் வளரும்படியாக வேண்டிக்கொண்டு, இம்மாதம் "சோர்வு" என்ற தலைப்பிற்குள் போவோம்.**

நீங்கள் சோர்வை அனுபவித்ததுண்டா? சரீரத்தில் நாம் அனைவரும் சோர்வை அவ்வப்போது அனுபவித்திருப்போம். வெயிற்காலத்தில் வெளியே சூரியனில் அதிகமாக நேரம் செலவழிக்கும் போது, நாம் விளையாடும் போது, உடற்பயிற்சி செய்யும் போதுதான் பல நேரங்களில் நம் சரீரத்தில் நாம் சோர்வை அனுபவிப்பதுண்டு. அச்சமயங்களில் நாம் என்ன செய்வோம்? பொதுவாக சிறிது நேரம் நிழலில் அமர்ந்து ஓய்வெடுப்போம். குளிர்ந்த தண்ணீரோ அல்லது குளிர்பானமோ குடிப்போம். நண்பர்களே, எப்படி நம் சரீரத்தில் நாம் சோர்வை அனுபவிக்கிறோமோ அதுபோல, நம் ஆத்துமாவிலும்



அவ்வப்போது நாம் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளுக்கேற்றாற்போல் சோர்வு ஏற்படுவதுண்டு. அந்த நேரங்களில் நாம் எப்படி அச்சோர்வை மேற்கொள்ளலாம் என்பதை வேத வசனத்தின் அடிப்படையில் ஆராய்வோம். இந்தப் பூமியில் சோர்வடையாத ஒரு மனிதனையும் நம்மால் பார்க்க முடியாது. அப்படி சோர்வடையும் போது, அச்சோர்வை அவர்கள் பொதுவாக இரண்டு விதமாய் கையாளுவார்கள். ஒருசிலர் அந்தச் சோர்வில் தானே மூழ்கி, இப்படித்தான் வாழ்க்கை இருக்குமென்றெண்ணி, அதை ஏற்றுக் கொண்டு சோர்விலேயே வாழ்ந்துக் கொண்டிருப்பார்கள். மற்றவர்கள் அச்சோர்வில்




மூழ்கிவிடாமல், சிறிது சோர்வடைந்தாலும் மறுபடியும் எழுந்து முன்னேறிப் போவார்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும் அவ்வப்போது நம் ஆவியில் சோர்வடையும்போது, எப்படி சரீரச்சோர்விலிருந்து மீள்வதற்காக நிழற்குடையையோ, ஓய்வையோ, குளிர்பானத்தையோ தேடிச் செல்கிறோமோ; அதுபோல ஆவி மற்றும் ஆத்துமாவில் வரும் சோர்விலிருந்து மீள்வதற்காக தேவனுடைய பிரசன்னத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.

நீங்கள் மாரத்தான் போட்டியைப் பார்த்தீர்களென்றால், அதில் ஓடுகிற ஒவ்வொரு போட்டியாளர்களுக்கும் தேவை வரும்போது, குடிப்பதற்காக குறிப்பிட்ட தூரங்களில் தண்ணீர் பந்தலிட்டு தண்ணீர் பாட்டில்களை வைத்திருப்பார்கள். ஆம் நண்பர்களே, நம் வாழ்க்கையும்கூட மாரத்தான் ஓட்டம் தான். இவ்வோட்டத்தில் நம்மால் தனியாக ஓட முடியாது. தேவன் நமக்கு வேண்டும், நாம் தேவனோடு ஓட வேண்டும். பல நேரங்களில் வாலிபர்களாகிய நீங்கள் சோர் வடைவதற்கானப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் ஒருசில காரணங்கள் எவையென்றால், குறிப்பிட்ட ஏதாவது பாவப் பழக்கத்திலிருந்து மீளமுடியாமல் திரும்பத் திரும்ப வீழ்வது




ஆவிக்குரியச் சோர்வை உண்டாக்குகிறது. தொடர்ச்சியாக ஜெபித்துக் கொண்டிருந்தும் நீடித்த நாட்களாய் பதிலைக் காணாதிருப்பது

ஆவிக்குரிய சோர்வை உண்டாக்குகிறது. பெற்றோர்கள் உங்களைப் புரிந்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்து, அது நடக்காமல் போனால், ஆவிக்குரிய சோர்வு ஏற்படுகிறது. உறவுகளில் பிரச்சனை ஏற்படும்போது, ஆவிக்குரிய சோர்வு ஏற்படுகிறது.

ஆனால், என் அன்பு நண்பர்களே, சோர்வு உங்களை முற்றிலுமாய் அமிழ்த்த இடம் கொடுக்காதீர்கள். ‘‘நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப் பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்?...’’ (எரேமியா 12:5) என்று தேவன் கேட்கிறார். ஆம் நண்பர்களே, எந்தவொரு தந்தையும் தன் பிள்ளை பலவானாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ, அதுபோல தன் பிள்ளைகளாகிய நீங்களும் அவரைச் சார்ந்திருந்து, பலவானாக வேண்டுமென்றே நம் தேவனும் விரும்புகிறார். இப்படி அவர் சொல்வதினால், நம்முடைய சோர்வையும், விடாய்ந்திருக்கும் உள்ளத்தையும் அவர் அறியாமலில்லை. அப்படியாக, ‘‘நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன்’’ (எரேமியா 31:25) என்கிறார். அதிகமான மனப்பாரங்களைச் சுமப்பதும்

**ஆவி மற்றும் ஆத்துமாவில் வரும் சோர்விலிருந்து மீள்வதற்காக தேவனுடைய பிரசன்னத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.**

ஆவிக்குரிய சோர்வை ஏற்படுத்தும். ஆகவே தான், ‘‘கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்’’ (சங்கீதம் 55:22) என்கிறார். இதுமட்டுமல்லாமல், இயேசுவைக் குறித்து வேதம் சொல்லும் முக்கியமான ஓர் வேதப்பகுதியை நான் உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன். காரணம், வேதத்தில் எத்தனையோ பாத்திரங்கள் பல நற்காரியங்களுக்கு மாதிரியாக திகழ்ந்தாலும், இயேசு கிறிஸ்துவே நம்முடைய பிரதான முன்மாதிரியாக இருப்பவர். இயேசு எப்படி தமக்கு ஏற்பட்டச் சோர்வை மேற்கொண்டார் என்று வேதம் சொல்கிறது. ‘‘அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாத படிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்’’ (எபிரெயர் 12:1-3) என்பதாக வசனங்கள் விளக்குகின்றன.

**அன்பு தம்பி, தங்கச்சி! பல நேரங்களில், நாம் எதிர்பார்க்கும்படி மற்றவர்கள் செய்யாமல் இருக்கும் போது, நாம் செய்த நன்மைக்கு பதில் நன்மை வராதிருக்கும்போது சோர்ந்து போகிறோம். ஆனால் இயேசுவோ தமக்கு நேர்ந்த பிரச்சனைகளால் சோர்ந்து போகாமலிருந்து பிதாவாகிய தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றினார். நாமும் இயேசுவைப் போல நம் சூழ்நிலைகளுக்கப்பாற்பட்டு நன்மை செய்வதில் சோர்ந்து போகாதிருப்போமாக!**


## மும்பையில் எழுப்புதல் வாலிபர் கூடுகை

**BHANDUP**

நவம்பர் 5, சனிக்கிழமை

மாலை 5 மணி முதல் 9 மணி வரை

தொடர்புக்கு : 9004882470 / 8082410410



**MALAD**

நவம்பர் 6, ஞாயிற்றுக்கிழமை

மாலை 5 மணி முதல் 9 மணி வரை

தொடர்புக்கு : 9664050567 / 9004882470

செய்தியும் ஜெபமும், சகோ. அவினாஷ்

# ஒபதியா

(ஏதோமின் மேல் நியாயத்தீர்ப்பும்,
இஸ்ரயேலருக்கு உண்டாகும் விடுதலையும்)



வேத ஆராய்ச்சி: ரேச்சல்

அன்பான இளம் நெஞ்சங்களே! இந்த மாதமும் சிறிய தீர்க்கதரிசன நூல்களில் நான்காவது புத்தகமான ''ஒபதியா'' பற்றி சுருக்கமாகக் காணலாம். ஒபதியா என்பதற்கு 'யெகோவாவின் ஊழியன்' என்று அர்த்தமாம்.

## அறிமுகம்

ஒபதியாவின் கருப்பொருள் அழிவுக்கு முன்னானது பெருமை என்ற உண்மையை மீண்டும் உணர்த்துவதாகும். எருசலேமுக்கு ஏற்பட்ட தீங்கைக் குறித்து அகந்தையோடு களிகூர்ந்ததால் ஏதோமியர் நியாயந்தீர்க்கப்படுவர் என ஒபதியா முன்னுரைக்கிறார்.



**ஆசிரியர்:** ஒபதியா

**காலம்:** கி.மு. 840

**அதிகாரங்கள்:** 1

**வசனங்கள்:** 21

**வார்த்தைகள்:** 670

**முக்கிய நபர்:** ஒபதியா

## ஒபதியாவில் கிறிஸ்து

தேசங்களின் நியாயாதிபதியாகவும் (15,16 வசனங்கள்), இஸ்ரவேலரின் மீட்பராகவும் (17-20 வசனங்கள்), இராஜ்யத்தை உடையவராகவும் (21 வசனம்) சித்தரிக்கப்பட்டுள்ளார்.

## ஒபதியா – சுருக்கம்

ஏதோமின் நியாயத்தீர்ப்பு குறித்த தீர்க்கதரிசனம்

- நியாயத்தீர்ப்பின் நிச்சயம் (1:1-4 வசனங்கள்)
- நியாயத்தீர்ப்பு முழுமையடைதல் (1:5-9 வசனங்கள்)

## ஏதோம் நியாயத்தீர்ப்பு அடிப்படை

- சகோதர பாசம் இல்லாததால் (1:10ம் வசனம்)
- கர்வத்திற்காக (1:11,12 வசனங்கள்)
- கொடூரத்திற்காக (1:13,14 வசனங்கள்)

## ஒபதியா

நியாயத்தீர்ப்பின் நேரம் (1:15 வசனம்)

நியாயத்தீர்ப்பின் விளைவு (1:16-18 வசனங்கள்)

இஸ்ரவேலின் மீட்பு (1:19-21 வசனங்கள்)

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

கீழே வேதத்தில் உள்ள இடங்கள், ஊர்கள் பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. சரியான விடையைக் கண்டறிந்து, வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

1. கர்த்தர் என் சத்துருக்களை எனக்கு முன்பாக உடைத்து ஓடப்பண்ணினார் என்று சொல்லி, அந்த ஸ்தலத்திற்கு தாவீது என்ன பேரிட்டான்?
2. யாக்கோபு, தனக்கு ஒரு வீடுகட்டி, தன் மிருக ஜீவன்களுக்குக் கொட்டாரங்களை எங்கே போட்டான்?
3. இச்சித்த ஜனங்களை அடக்கம்பண்ணினதினால், அந்த ஸ்தலத்துக்கு மோசே என்ன பேரிட்டான்?
4. தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப்பண்ணி, தண்ணீர் ஓடிவரப்பண்ணினார், அந்த இடம் என்னவென்று பேரிடப்பட்டது?
5. யெரொபெயாம் எப்பிராயீம் மலைத்தேசத்தில் எதைக் கட்டி வாசம் பண்ணினான்?
6. தெபீரின் முற்காலத்துப் பேர் என்ன?
7. எப்ரோனுக்கு மற்றொரு பேர் என்ன?
8. கர்த்தருடைய அக்கினி இஸ்ரவேலருக்குள்ளே பற்றியெரிந்ததினால் மோசே அவ்விடத்துக்கு என்ன பேரிட்டான்?
9. காயீன் கர்த்தருடைய சந்நிதியை விட்டுப் புறப்பட்டு எந்த தேசத்தில் குடியிருந்தான்?
10. பொன்னுக்காக எங்கே போகும்படி யோசபாத் தர்ஷீஸ் கப்பல்களை செய்தான்?

## கடந்த மாத விடைகள்

1. திராட்சக்குலைகள் (ஓசியா 9:10)
2. பேய்க்கொம்மட்டிக்காய்கள் (1 இராஜா. 4:39)
3. வசந்தக்காலத்துப்பழம், திராட்சப்பழம் (ஏசாயா 16:9)
4. வெள்ளரித்தோட்டம் (ஏசாயா 1:8)
5. காட்டத்திப்பழம் (ஆமோஸ் 7:14)
6. கிச்சிலிப்பழம் (உன். 2:5)
7. அத்திப்பழ அடை (2 இராஜா. 20:7)
8. மாதளம் பழம் (யாத். 28:34)
9. மாதளம் பழம் (எரே. 52:22)
10. திராட்சக்குலை (எண். 13:24)

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்

**15. 10. 2022**

கடந்த மாத வெற்றியாளர்

சகோதரி **ரூபி**, களியக்காவிளை

அவர்களை வாழ்த்துகிறோம்

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org




வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1ST SUNDAY

**(2ND OCTOBER)**

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center, Ajantha Mahal, No.3,6th West Cross Road, Gandhi Nagar.
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:62 2nd Floor, Benny Kumaran Main Road.
9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall, West Church.
9985033401 | 9442885315

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsemane Prayer Center, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram, (Land mark : South Police Station to Kamaraj college Road)
9442885315

**SANKARANKOIL (2:30-5)**
Gethsemane Prayer CenterSekinah Mahal Mullai Nagar
9750955548 / 8344949555

## EVERY 2ND SATURDAY

**(8TH OCTOBER)**

**MADURAI (4:30 - 6:30PM)**
Gethsamane Prayer Centre 2/56, Upstairs, 1st Street, Main Road, Subramaniya Puram.
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY

**(9TH OCTOBER)**

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School, Opp Rly. Station.
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM – 5.30PM)**
St. Paul's Matriculation School, Kovilpatti.
9677858766 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building R.A. Nursing Institute SCV Computers (top floor) Main Road, Alangulam, Near Union Office Opposite.
9965377427 | 9750955548

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor.
9750955548 | 9976766422

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School, Surandai.
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Getsamane prayer Center
9677858766 / 9442906567

**SATHANKULAM (3-5:30PM)**
Hendry Matric Higher Secondary School Mela Sathankulam
Ct: 9442885315

## EVERY 3RD SUNDAY

**(16TH OCTOBER)**

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center Shah Complex No: 43/R4, Rajendra Nagar Trivandrum Road.
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center,
No:90, 1st, Floor Arts College Rd.,
Near Charan Tower, Coimbatore.
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center
22A, Ist Floor, Thennur High Rd.,
Near KMC Bus Stop, Thennur,
9488475315

**JEBAMALAI (2PM)**
Kadaiyam (via),
Keelamathapuram,
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road. 9488475315

**NALUMAVADI (3-5:30PM)**
Tabernacle of God,
Nalumavadi 9442885315

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center, 1A/25B, Bypass Road
(Opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3 - 6P.M.)**
Gethsamane Prayer Centre,
MBT Road, Navalpur
9500283179 | 9442885315

## EVERY 4TH SATURDAY

**(22ND OCTOBER)**

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre
M K Complex 71,
Venkatesapuram Near Bank Of Baroda, Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY

**(23RD OCTOBER)**

**THIRUVALLUR (3-5:30)**
Gethsamane Prayer Center
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3PM-5PM)**
Gethsamane Prayer center,
Near Arun Hospital, Royakottai Road,
Ct: 9962085523 | 9524999711

## MUMBAI (5PM - 8PM)

**1st sunday - Dharavi**
**2nd Sunday- Bhandup**
**3rd Sunday - Malad**
**9004882470**


இயேசு விடுவிக்கிறார்

வாலிபர் உலகம்




சத்தியம் TV சனிக்கிழமை 6:30am
7am Youtube மற்றும் Comforter TV யிலும் பார்க்கலாம்

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட
ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!

9750955547

Sathiyam TV YouTube Comforter DIGITAL CHANNEL

WE'RE GOING LIVE REVIVAL IGNITERS

ON SUNDAY 23RD OCTOBER,
TIME: 3 - 5PM

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

# செய்திகள்!

## 2029ம் ஆண்டுக்குள் ஜெர்மனி, ஜப்பானை வீழ்த்தி, உலகின் பொருளாதார பலமிக்க 3வது நாடாக இந்தியா மாறும்! புதிய கணிப்பில் தகவல்!

உலக நாடுகளின் பொருளாதார நிலை குறித்த ஆய்வறிக்கையை சர்வதேச நிதி அமைப்பான ஐஎம்எப் நேற்று முன்தினம் வெளியிட்டது.

அதில், உலகின் பொருளாதார பலமிக்க டாப்-10 நாடுகளின் பட்டியலில், இங்கிலாந்தை பின்னுக்கு தள்ளி இந்தியா 5வது இடத்தை பிடித்தது. கொரோனா பெருந்தொற்று பாதிப்பால், கடந்த 2020, 2021ம் ஆண்டுகளில் சீனா உள்ளிட்ட வல்லரசு நாடுகள் பல, பொருளாதார வீழ்ச்சியைக் கண்டுள்ளன. ஆனால், இந்தியாவின் பொருளாதாரம் நிலையாக சென்று கொண்டிருக்கிறது. இதன் காரணமாகவே, நேற்று முன்தினம் இங்கிலாந்தை அது முந்தியது.

இந்நிலையில், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் தலைமை பொருளாதார ஆலோசகரான சவுமியா காந்தி கோஷ், 2030ம் ஆண்டு வரையிலான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை கணித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில், 'கடந்த 2014ம் ஆண்டில் உலக பொருளாதார பலமிக்க நாடுகளின் பட்டியலில் இந்தியா 10வது இடத்தில் இருந்தது. நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் நிலையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) அளவு, 6 முதல் 6.5 சதவீதம் வரை இருக்கும் என கணக்கிடப்பட்டு உள்ளது. தற்போதுள்ள வளர்ச்சி விகிதம் நீடித்தால், இது 6.7 முதல் 7.7 சதவீதம் உயரவும் வாய்ப்புள்ளது. இருப்பினும், 6.5 சதவீத ஜிடிபி வளர்ச்சியை கணக்கிட்டாலே, வரும் 2027ம் ஆண்டில் ஜெர்மனியையும், 2029ம் ஆண்டில் ஜப்பானையும் பின்னுக்குத் தள்ளி, உலகின் 3வது மிகப்பெரிய பொருளாதார பலமிக்க நாடு என்ற பெருமையை இந்தியா பெறும்' என கூறியுள்ளார்.

- உலகளவில் சீனாவின் பொருளாதாரம் தற்போது தள்ளாட்டம் கண்டு வருகிறது. உலகின் 3வது மிகப்பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறுவதற்கு, இந்த நிலை மிகவும் சாதகமாக அமைந்துள்ளது.

- மேலும், செல்போன் ஜாம்பவன் நிறுவனமான ஆப்பிள், தனது ஐபோன்-14 மாடல் தயாரிப்பு தொழிற்சாலையை இந்தியாவில் நிறுவ முடிவு செய்திருப்பதும், இந்தியாவுக்கு மேலும் சாதகமான சூழலை உருவாக்கி இருக்கிறது. - தினகரன், 05 செப்டம்பர் 2022.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

JESUS REDEEMS MINISTRIES

50 கோடி சுவிசேஷம்
5 கோடி ஆதாயம்
VISION 2030

# இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்

## 10 கோடி

வாலிபர்களுக்கு சுவிசேஷம்

## 1 கோடி

வாலிபர்களை இரட்சிப்புக்குள் வழி நடத்த

**15 மணி நேர ஜெபத்திட்டம்**

## ஜெபக்குறிப்புகள்

50 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் தரிசனத்தை பெற்றிருக்கும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள், தேவ சித்தத்தை பரிபூரணமாக செய்து முடிக்க வேண்டிய கிருபையை தேவன் கொடுக்க ஜெபிப்போம்.

இந்த திட்டத்தை 2030ம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டிய விசேஷித்த ஞானம், அபிஷேகம், பெலன் மற்றும் சுகம் அருளப்படவும், தேவன் கொடுத்த அனைத்து வாக்குத்தத் தங்கள் நிறைவேற்றப்படவும், சகோதரருக்கு விரோதமாக எழும்பும் சத்துருவின் வல்லமைகள் அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

10 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, 1 கோடி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த பொறுபெடுத்திருக்கும் வாலிபர் ஊழியத்தின் முழுநேர ஊழியர்கள், இந்தியா முழுவதும் இருக்கும் REVIVAL IGNITERS, மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கு, இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அபிஷேகமும், கிருபையும், வல்லமையும், ஆத்தும பாரமும் உண்டாக ஜெபிப்போம்.

**ஒரு கோடி** ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு **ஒரு கோடி மணி நேரம்** ஜெபிக்க புதிய ஜெப திட்டங்களையும், ஜெப வீரர்களையும், ஜாமக்காரர்களையும் தேவன் எழுப்பி தர ஜெபிப்போம்.

எஸ்தர் 8ஆம் அதிகாரம் 10ம் வசனத்தின்படி, ஒரு கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தை தீவிரமாக கொண்டு சென்று, நற்செய்தி அறிவிக்கும் அஞ்சர்காரர்களை தேவன் எழுப்பவும், அவர்கள் தேசத்திற்குள் அனுப்பப்படவும் ஜெபிப்போம்.

ஊடகத்தின் (தொலைக்காட்சி, சமூக வலைத்தளம் ) மூலம் சுவிசேஷத்தை தீவிரமாக எடுத்து செல்லவும், புதிய நிகழ்ச்சிகளை தயாரிக்கவும், தேவன் புதிய திட்டங்களை கொடுக்கும்படி ஜெபிப்போம்.

**தினமும் இந்த தரிசனத்திற்காக**

## 30 நிமிடம் ஜெபிப்பேன்

| | | | |
|---|---|---|---|
| DAY - 1 | DAY - 2 | DAY - 3 | DAY - 4 |
| DAY - 5 | DAY - 6 | DAY - 7 | DAY - 8 |
| DAY - 9 | DAY - 10 | DAY - 11 | DAY - 12 |
| DAY - 13 | DAY - 14 | DAY - 15 | DAY - 16 |
| DAY - 17 | DAY - 18 | DAY - 19 | DAY - 20 |
| DAY - 21 | DAY - 22 | DAY - 23 | DAY - 24 |
| DAY - 25 | DAY - 26 | DAY - 27 | DAY - 28 |
| DAY - 29 | DAY - 30 | | |

Name..........................................................

Mobile........................................................

Place.........................................................

நீங்கள் ஜெபித்தவுடன் எங்களுக்கு photo எடுத்து 97509 55547 என்ற whatsapp நம்பருக்கு அனுப்பவும்

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25 - 09 - 2022.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.

